மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

மலர் 2 | 15 - 4 - 54 | இதழ்

மறுமலர்ச்சி மாநிலமெங்கும் மலர முதல் காரணமாகவும் முக்கிய காரணமாகவும் அமைந்த அச்சுப்பொறியை, இங்கிலாந்திலே முதன்முதல் நிறுவிய

வில்லியம் காக்ஸ்டன்

அச்சுப்பொறியை இயக்கிக் காட்டுகிறான்; அரசன் நான்காம் எட்வர்டு பார்வையிடுகிறான் !

உள்நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளி நாடு அணா

பெரியார்—அண்ணா முதல் அறிமுகம்

1934-ல் திருப்பூரில் நடைபெற்ற செங்குந்தர் வாலிபர் மாநாட்டிற்குத் தலைமை தாங்கும்படி அறிஞர் அண்ணா அவர்கள் அழைக்கப்பட்டார். அப்பொழுது அண்ணா அவர்கள் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் ஹானர்ஸ் வகுப்பில் பயின்றுகொண்டிருந்தார். என்றாலும் அழைப்பை அண்ணா ஏற்றுக்கொண்டார். அறிஞர் அண்ணா அவர்கள் சொற்பொழிவாற்ற வெளியூருக்கு அழைக்கப்பட்ட முதல் அழைப்பு அதுதான். மேலும், அண்ணா அவர்கள் தலைமை தாங்கிய முதல் மாநாடும் அதுதான்.

அந்த மாநாட்டில் பெரியார் இராமசாமியும் கலந்துகொண்டார். அண்ணா அவர்கள் பெரியார் இராமசாமியைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தார்; அவர் பரப்பிய கொள்கையின்மீது பற்றுக்கொண்டிருந்தார்; ஆனால் அதுவரையில் அண்ணா பெரியார் அவர்களைப் பார்த்ததில்லை. பெரியாரை அண்ணா அவர்கள் நேரடியாகப் பார்த்தது, அந்த மாநாட்டில்தான். அண்ணாவின் சொற்பொழிவை முதன்முதல் பெரியார் கேட்டதும் அந்த மாநாட்டில்தான்.

அண்ணா அவர்கள் தலைமையுரை ஆற்றினார். அண்ணாவின் வாயினின்றும் சொற்கள் தங்கு தடையின்றி அழகாகக் கேட்டார்ப் பிணிக்கும் தன்மையனவாய் வெளிவந்ததையும், சொற்பொழிவு கருத்துச் செறிந்ததாய் இருந்ததையும், வாதிடும் தன்மை சிறந்து விளங்கியதையும் கண்டு பெரியார் வியந்தார். அண்ணா அவர்கள் தலைமையுரை ஆற்றிவிட்டு வந்து உட்கார்ந்தபோது, பெரியார் அருகில் இருந்த நாற்காலியில் அமர்ந்தார்.

அப்பொழுது பெரியார், அண்ணாவைப் பார்த்து, "என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டாராம்.

அதற்கு அண்ணா அவர்கள் "படித்துக்கொண்டிருக்கிறேன்" என்று கூறினாராம்.

"என்ன படித்துக்கொண்டிருக்கிறீர்கள்?" என்று பெரியார் கேட்டாராம்

"பச்சையப்பன் கல்லூரியில் ஹானர்ஸ் வகுப்பு படித்துக்கொண்டிருக்கிறேன்" என்று அண்ணா பதிலிறுத்தாராம்.

"இன்னும் எவ்வளவு வருஷங்கள் படிக்கவேண்டும்?"

"இன்னும் ஒருவருஷம் படிக்கவேண்டும்."

"படித்து முடிந்த பிறகு என்ன செய்யப்போகிறீர்கள்?"

"என்ன செய்வதென்று இனிமேல்தான் யோசிக்கவேண்டும்."

"யோசிப்பானேன்? இப்பொழுது செய்கிற வேலையையே தொடர்ந்து செய்யலாமே!" என்று பெரியார் குறிப்பிட்டாராம்.

"எந்த வேலையைச் சொல்லுகிறீர்கள்?" என்று அண்ணா அவர்கள் கேட்டாராம்.

"அதுதான், பேசுகிற வேலை!" என்று பெரியார் சிரித்துக் கொண்டு கூறினாராம்.

அண்ணா அவர்கள் அதற்குப் புன்முறுவல் பூத்தவண்ணம்; "முயற்சி செய்கிறேன்!" என்று கூறினாராம்.

மன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.

15 - 4 - 54 வியாழக்கிழமை

அரசு நீங்கு படலம்

10-4-1952! எவ்வளவு புனிதமான நாள்! "ஆச்சாரியார் வருகிறார், அவதார புருஷர் வருகிறார்!" என ஆலாத்தி எடுக்கப் பட்ட நாள்! "இதுகள் முன்பு இவரை வேண்டாமென்று டில்லிக்கு அனுப்பினார்களே! இப்பொழுது பாருங்கள்! மந்திரி சபை யமைத்து, இந்த மண்டலத்தை ரட்சித்திடுமாறு அவர்முன் மண்டியிட்டு அவர்களே கேட்கின்றனர்! அந்த ஆச்சர்ய சீலரும் ஒத்துக் கொண்ட மகிமையைக் கேளுங்கள்!" எனத் தம் மார்பிலே புரளும் முப்புரி நூலை உருட்டிக் கொண்டு பெருமை பேசிய நன்னாள்! "மகான் வந்தார்! இனிக் கலி தீர்ந்தது! கவலைக்கு இடமே கிடையாது! பெய்யாத மழையும் இனிப் பெய்யும்! பஞ்சம் பட்டினி என்பவை இனிப் பொய்யாகிப்போகும்! வரண்ட வயலில் பயிர் மிக வளரும்! வகைகெட்டுக் கிடக்கும் இந்த நாட்டில் சனாதனப் பயிரும் இனி உயரும்!" என மாம்பலமும், மைலாப்பூரும் களி நடனம் புரிய, இந்துவும் மித்திரனும் புகழ்ப்பாசுரங்கள் ஒலிக்க, கல்கியார் கண்களில் ஆனந்தக்கண்ணீர் வழிய, கனபாடிகள் கூட்டங்கள் கீதைமொழி பாடிட, அன்று சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் மந்திரி பதவி ஏற்றார்!

அஞ்ஞாத வாசத்தில் அவர் இருந்தார்! "போதும் இந்தப் பொல்லாத அரசியல் வாழ்வு" என அவர் ஒதுங்கி, வியாசர் விருந்தையும், வேதங்களின் நறுசுவையையும் பெற்று ஓய்ந்திருந்த நேரத்தில், அவருக்கு அழைப்பு வந்தது! அவர் என்ன செய்வார்? தொல்லையானது எனத் தள்ளிவிட முடியுமா? முன்பு அடைந்த தோல்வியை நினைத்து, மறுத்துவிட முடியுமா? சாதாரண மனிதர் என்றால் அப்படி செய்திருக்கக்கூடும். அவரோ, அவதார புருஷர்! அனாதரட்சகர்! பக்தர்களின் கூக்குரல் கேட்டு, துஷ்டர்களை நிக்கிரகம் செய்து, இஷ்டர்களைப் பரிபாலிக்க, அவர் ஓடோடியும் வந்தார்! மந்திரிசபை யமைந்தது!

பொதுத் தேர்தலுக்குப் பின், காங்கிரஸ் கட்சி சென்னை மாநிலத்தில் தனிப்பட்ட முறையில் மந்திரிசபையை அமைக்கும் ஆற்றலையிழந்தது. முன்பு ஏகபோக உரிமையுடன், சட்ட சபையை ஆண்டுவந்த காங்கிரஸ், பொதுத் தேர்தலில் அடைந்த தோல்விகளால், சீரழிந்து, சிறுபான்மைக்கட்சியானது. அந்த அலங்கோல நிலையில், அஞ்ஞாத வாசத்திலிருந்த ஆச்சாரியார் புறப்பட்டு வந்தார்; கவர்னர் அனுமதியுடன் சட்டசபைக்குள் நுழைந்தார்! மாணிக்கவேலர்கள், மன்னர் பரம்பரையினர், பணத்தைக் காட்டினால் மயங்குபவர்கள், பதவி தந்தால் நெருங்குபவர்கள் இவர்களைக் கலந்து, ஒரு கலப்பட மந்திரிசபையை அமைத்தார்! அந்த "மாபெரும்" காரியத்தைச் செய்து முடித்ததற்காக, 'மகான்!' என்று போற்றப் பட்டார், "எம்மானே! பெம்மானே!" என்று ஏத்தித் தொழப்பட்டார்.

அப்பொழுது அவருக்கு வயது 73-க்கு மேலாகிவிட்டது, தள்ளாத வயதுதான்! கண் பார்வைகூட முன்னைவிட மங்கியிருந்தது. பெரிய எழுத்துப் புத்தகங்களைத்தான் நன்று

வருந்துகின்றோம்

திருச்சி நகரசபை உருப்பினரும் திராவிட முன்னேற்றக் கழக ஆதரவாளருமான தோழர் என். சங்கரன் அவர்கள் உடல்நலக் குறைவாயிருந்து திடீரென்று சென்ற ஞாயிற்றுக் கிழமை 4-4-53-ம் நாள் இயற்கை எய்திய செய்தி கேட்டு மிக வருந்துகின்றோம்.

தோழர் சங்கரனை இழந்து பிரிவாற்றாது வருந்தும் அவரது குடும்பத்தினருக்கும், தோழர் சாம்புவுக்கும் நமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

சியும் காட்டப்பட்டதோ, அதே அளவு மகிழ்ச்சியும், குதூகலமும் அவர் பட்டத்தை விட்டுக் காடுபோகும்பொழுது காட்டப்பட்டிருந்தால் எப்படியிருக்கும்! இராஜகோபாலாச்சாரியார் மந்திரிபதவி யமைத்தபொழுது எவ்வளவு ஆதரவு இருந்ததோ, அதைவிட அதிகமான ஆதரவு அவர் வெளியேறுவதற்குக் கிடைத்திருக்கிறது. இவர் மந்திரிசபை அமைத்தால் நல்லது என்று கூப்பிட்டவர்களே, இவர் போனால் போதும் என்று கூறுமளவுக்கு வந்துவிட்டனர். ஒருவரைப் பிடிக்கவில்லை யென்றால், இவ்வளவு வேதனையும், வெறுப்பையுமா காட்டுவார்கள்! "தள்ளாத வயது! இருந்தாலும் அவரைப்போலத் தகுதியானவர் வேறு யாரும் கிடையாது!" என்று புகழ்பாடி அழைத்தவர்களே, "ஆமாம், தள்ளாத வயது! மந்திரிப்பதவி என்ற பாரத்தை அவர் சுமந்து கஷ்டப்படுவதை நாம் இனிமேலும், பார்த்துக் கொண்டிருக்கக்கூடாது. அவருக்குப் பூரண ஓய்வு தரவேண்டும்! டாக்டருக்கு ஆளனுப்புங்கள்!" என்று அவரை வழியனுப்புவதில் உற்சாகத்துடன் இருக்கின்றனர்.

இராமர் அயோத்தி விட்டுப் போகும் பொழுது, கைகேயி போன்ற ஒருத்திதான் மகிழ்ச்சியுடனிருந்தாளாம், மற்ற மக்கள் எல்லோரும் சோகக் கடலில் தள்ளப்பட்டனராம். இராஜகோபாலாச்சாரியார் போகும்பொழுது,

சேலம் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக

இரண்டாவது மாநாடுகள்

சேலம் மார்க்கட் மைதானத்தில் நடைபெறும்

1 - 5 - 54 சனியன்று
சமுதாய மாநாடு
தலைவர் : ப. உ. சண்முகம்
துவக்குபவர் : கோகுல கிருஷ்ணன்

2 - 5 - 54 ஞாயிறன்று
அரசியல் மாநாடு
தலைவர் : இரெ. இளம்வழுதி
துவக்குபவர் : எஸ். முத்து

அறிஞர் அண்ணாவும்

முன்னணிச் சொற்பொழிவாளர்கள் அனைவரும்
கலந்துகொள்வர்

தோழர் கே. ஆர். ராமசாமிக் குழுவினர் நடிக்கும்
"காதல் ஜோதி" "ஓர் இரவு"
நாடகங்கள் இரு நாட்களிலும் நடைபெறும்.

மாநாட்டு அலுவலகம்: 59, 815, பார்க் தெரு, சேலம்.

வ. கு தலைவர்	செயலாளர்	துணைச்செயலாளர்	பொருளாளர்
ஜி. பி. சோமசுந்தரம்	பி. ராமலிங்கம்	ப. கண்ணன்	பி. எம். குப்புசாமி.

சியும் காட்டப்பட்டதோ, அதே அளவு மகிழ்ச்சியும், குதூகலமும் அவர் பட்டத்தை விட்டுக் காடுபோகும்பொழுது காட்டப்பட்டிருந்தால் எப்படியிருக்கும்! இராஜகோபாலாச்சாரியார் மந்திரிபதவி யமைத்தபொழுது எவ்வளவு ஆதரவு இருந்ததோ, அதைவிட அதிகமான ஆதரவு அவர் வெளியேறுவதற்குக் கிடைத்திருக்கிறது. இவர் மந்திரிசபை அமைத்தால் நல்லது என்று கூப்பிட்டவர்களே, இவர் போனால் போதும் என்று கூறுமளவுக்கு வந்துவிட்டனர். ஒருவரைப் பிடிக்கவில்லை யென்றால், இவ்வளவு வேதனையும், வெறுப்பையுமா காட்டுவார்கள்! "தள்ளாத வயது! இருந்தாலும் அவரைப்போலத் தகுதியானவர் வேறு யாரும் கிடையாது!" என்று புகழ்பாடி அழைத்தவர்களே, "ஆமாம், தள்ளாத வயது! மந்திரிப்பதவி என்ற பாரத்தை அவர் சுமந்து கஷ்டப்படுவதை நாம் இனிமேலும், பார்த்துக் கொண்டிருக்கக்கூடாது. அவருக்குப் பூரண ஓய்வு தரவேண்டும்! டாக்டருக்கு ஆளனுப்புங்கள்!" என்று அவரை வழியனுப்புவதில் உற்சாகத்துடன் இருக்கின்றனர்.

இராமர் அயோத்தி விட்டுப் போகும்பொழுது, கைகேயி போன்ற ஒருத்திதான் மகிழ்ச்சியுடனிருந்தாளாம், மற்ற மக்கள் எல்லோரும் சோகக் கடலில் தள்ளப்பட்டனராம். இராஜகோபாலாச்சாரியார் போகும்பொழுது,

சேலம் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக

இரண்டாவது மாநாடுகள்

சேலம் மார்க்கட் மைதானத்தில் நடைபெறும்

1 - 5 - 54 சனியன்று	2 - 5 - 54 ஞாயிறன்று
சமுதாய மாநாடு	**அரசியல் மாநாடு**
தலைவர் : ப. உ. சண்முகம்	தலைவர் : இரெ. இளம்வழுதி
துவக்குபவர் : கோகுல கிருஷ்ணன்	துவக்குபவர் : எஸ். முத்து

அறிஞர் அண்ணாவும்

முன்னணிச் சொற்பொழிவாளர்கள் அனைவரும் கலந்துகொள்வர்

தோழர் கே. ஆர். ராமசாமிக் குழுவினர் நடிக்கும்

"காதல் ஜோதி" **"ஓர் இரவு"**

நாடகங்கள் இரு நாட்களிலும் நடைபெறும்.

மாநாட்டு அலுவலகம்: 59, 815, பார்க் தெரு, சேலம்.

வ. கு தலைவர்	செயலாளர்	துணைச்செயலாளர்	பொருளாளர்
ஜி. பி. சோமசுந்தரம்	பி. ராமலிங்கம்	ப. கண்ணன்	பி. எம். குப்புசாமி.

கல்கியார் போன்ற ஓரிருவர் மட்டும் கண்ணீர் வடித்து, நிற்கின்றனர். மற்றவர்களெல்லாம் குதூகலத்துடன் வழியனுப்புவதில் ஈடுபட்டுள்ளனர்.

10-4-52-ல் ஆச்சாரியார் மந்திரிப்பதவி ஏற்றால் நிலைமை சீர்படும் என்று காங்கிரஸ்காரர்கள் நம்பினர். 10-4-54-ல் ஆச்சாரியார் மந்திரி பதவியை விட்டுப், போனால்தான் நிலைமை சீர்படும் என்று அவர்கள் நம்புகின்றனர்; அதன்படி அவரை வெளியேற்றியும் விட்டனர். இரண்டாண்டுக்காலத்துக்குள், எவ்வளவு மாறுதல்! தனது ஆணவப் போக்காலும், எதேச்சாதிகார முறையாலும், ஆச்சாரியார் அத்தகைய சூழ்நிலையை வளர்த்துவிட்டார்.

ஆச்சாரியாரின் தனிக்குணமோ, அல்லது சென்னை மாகிலத்து அரசியல் 'தனிப்' பண்போ எதுவென்று தெரியவில்லை. ஆச்சாரியார் ஆட்சிபீடததில் உட்கார்ந்தால் உடனே எந்தக் காரணத்தாலோ அசையத்தொடங்கி, பதவிக்குள்ள காலத்துக்கு முன்னதாகவே அவரைக் கீழே தள்ளிவிடுகிறது. 1937-ல் ஆச்சாரியார் முதன்மந்திரியாக இருந்தபொழுதும், சட்டசபைக்குரிய காலம் முடியும்வரை அவரால் பதவியில் இருக்கக் கொடுத்துவைக்கவில்லை. 1946-ல் காங்கிரஸ் மீண்டும் சட்டசபைக்குள் வந்தபொழுது, காமராசர்—ராஜாஜி சண்டை முற்றி, ராஜாஜி டில்லிக்குப் போகவேண்டிய நிலை பிறந்தது. 1952-ல் காங்கிரஸ் பதவி ஏற்றபொழுது, ஆச்சாரியார் முதன்மந்திரியாக ஆக்கப்பட்டார். ஆனால் இரண்டு வருஷத்திற்குள் பதவியிலிருந்து விலகவேண்டிய அவசியம் வந்துவிட்டது.

1939-ல் ஆச்சாரியார் ஆட்சியில் மிகக் கடுமையான பொதுமக்கள் எதிர்ப்பைச் சம்பாதித்துக்கொண்டார். ஆனால் இன்று அதைவிடப் பெரும் (அன்று காங்கிரசிற்கு வெளியிலிருந்து எதிர்ப்பு வந்தது, இப்பொழுது காங்கிரசுக்குள்ளும் அந்த எதிர்ப்பு வலுத்துவிட்டது) அளவில் எதிர்ப்பு வந்துவிட்டது. இரண்டு தடவைகளிலும் அவர் மிகவும் முயற்சியெடுத்து எதிர்ப்பைப் பெற்றதெல்லாம், கல்வித்துறையில் உண்டாக்கிய புதுத் திட்டங்களால்தான். அப்பொழுது கட்டாய இந்தித் திட்டத்தால் எதிர்ப்பை அடைந்தார், இப்பொழுது புதிய ஆரம்பக் கல்வித்திட்டத்தால் எதிர்ப்பை அடைந்துள்ளார். அன்று வடநாட்டு இந்தி, இன்று வர்ணாச்சிரமத் திட்டம்—காரணம் எதுவாயிருந்தாலும், ஆச்சாரியார் ஆட்சிமுறை அரசியல் கொந்தளிப்பையும், பொதுமக்களின் வெறுப்பையும் பெற்றுவிடுகிறது.

சனாதன தருமத்தை அரசியல் அதிகாரத்தால் நிலைநாட்ட முயன்ற ஒருவர், சர்வாதிகாரப்போக்கில் அரசியல் எதிர்ப்பை அடக்கிவிட நினைத்த ஒருவர், திராவிட முன்னேற்றக் கழகத்தை தமது முதல் எதிரியெனக் குறித்து எப்படியேனும் அழித்துவிட திட்டமிட்டவர், ஆறு உயிர்களை பலிகொண்டு, ஐயாயிரம் பேர்களை வெஞ்சிறையில் தள்ளி, தடியடி துப்பாக்கிப்பிரயோகங்களைச் செய்து, கோலாகல வாழ்வு நடத்திய கொலுமண்டபப் பிரபு ஒருவர், தமது முயற்சிகளில் தோற்று பதவியிலிருந்து விலகுகிறார்—விலக்கப்படுகிறார் என்ற அளவில், ஆச்சாரியார் வெளியேற்றம் நமது கவனத்தைப் பெறுகிறதேயன்றி, ஆச்சாரியார் போய் காமராஜர் வருவதால் நிலைமை முற்றிலும் மாறிவிட்டதாகக் கூறமுடியாது.

ஆச்சாரியார் மந்திரிசபை யமைப்பதானாலும், காமராஜர் மந்திரிசபை அமைப்பதானாலும், டில்லி தலைமை பீடத்தின் ஆதரவையும், அனுமதியையும் பெற்றால்தான் முடிகிறது. திராவிடத்தின் அரசியல் போக்கை டில்லி தீர்மானிப்பதாக இருக்கக்கூடாது என்பதே நமது விருப்பம். ஆச்சாரியாரானாலும், அவருக்குப் பின் வரும் காமராசரானாலும் எதற்கெடுத்தாலும் டில்லிக்குக் காவடி தூக்கி, வரம்கேட்கும் அவசியம் ஒழியவேண்டும்.

இதுவரை அரசியல் பதவிகளிலிருந்து ஒதுங்கியிருந்த காமராஜர் இப்பொழுது முதன் மந்திரி பதவியேற்றுள்ளார். ஆச்சாரியார் கிளப்பிவிட்டுப்போயுள்ள அரசியல் அலங்கோலத்தை, வர்ணாச்சிரமக் கல்வித்திட்டத்தை, திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது பழிவாங்கும் நோக்கத்துடன் வீசப்பட்டுள்ள வல்லடி வழக்குகளை, புதிய மந்திரி நேர்மையும் நீதியுமறிந்து நீக்கிவிட வேண்டும். ஆச்சாரியார் நடந்த பாதையிலேயே காமராசரும் நடக்க முற்பட்டால், பொதுமக்களின் வெறுப்புக்கு ஆளாவதுடன், கடைசியில் ஆச்சாரியார் சென்றதைப்போலவே, தமது பதவியை மத்தியில் விட்டுச் செல்லவேண்டிய நிலை பிறக்கலாம்.

கருத்துக் கதிர்

வளமற்ற இந்திக்கு வாழ்வா?

"இந்தியைத் தேசிய மொழியாக்கவேண்டும் என்பதை நான் ஆதரித்ததே இல்லை. உலகத்திலுள்ள மொழிகளில் மிகவும் அதிகமாகக் கொலை செய்யப்பட்ட மொழி இந்தி மொழிதான்; தாங்கள் பேசுவதுதான் சரி என்று பலர் பலவிதமாய் இந்தி மொழியைப் பேசுகிறார்கள். காந்தியடிகள் இந்தி பேசும்போதுகூட நான் பல சமயங்களில் காதுகளை மூடிக்கொள்ள நேர்ந்ததைக் கூற விரும்புகிறேன்," என்று கவர்னர் பிரகாசா இராஜபாளையத்தில் அண்மையில் பேசியுள்ளார்.

"இந்தியினுடைய உண்மையான தன்மைகளை அறியாதவனல்ல நான். இந்தி வளமுள்ளதாகவும், பூரணமாக எல்லா மக்களுக்கும் பொருந்தக்கூடிய வகையில் வளர்ந்துள்ளதாகவும் இருக்குமானால் அதை ஆதரிப்பதில் தடையில்லை. ஆனால், இந்தி, இந்தியாவில் உள்ள வேறெல்லா மொழிகளைக் காட்டிலும் குறைபாடுடையதும், சிலவழிகளில் ஒழுங்கற்றதாகவும் விகாரமானதாயுமிருக்கிறது என்பதை இந்தியைப் புகுத்துபவர்கள் மறந்துவிடக்கூடாதென எச்சரிக்கிறேன்," என்று கன்னட இலக்கிய மாநாட்டுத் தலைவர் பேராசிரியர் வி. சீத்தாராமையா அவர்கள் அழுத்தந் திருத்தமாகக் கூறியுள்ளார்.

"உழவு, பொறியியல், மருத்துவக் கல்லூரிகளில் பம்பாய் அரசினரின் நோக்கத்திற்கொப்ப, இந்தியையே பயிற்றும் மொழியாக்குவது மாணவர் நலத்திற்கும் மராத்தி மொழியின் உரிமைக்கும், வளர்ச்சிக்கும் கேடுபயக்கும். தாய்மொழி ஒன்றே பல்கலைக்கழகப் பயிற்சி பெறும் பல நிலை மாணவர்க்கும் பயிற்றுவிக்கும் மொழியாக இருத்தற்குரிய மிகுந்த இயற்கையும், தகுதியும் உடையது" என்று பூனா பல்கலைக்கழக நிர்வாகக்குழு அண்மையில் தன் கருத்தைத் தெரிவித்துள்ளது.

இப்படியாக இந்தியத் துணைக்கண்டத்தின் நாலா பக்கங்களிலிருந்தும், இந்தித் திணிப்பிற்கு எதிராகக் கருத்துக்கள் பரிமாறப்படுகின்றன என்பது மட்டுமல்லாமல், ஆங்காங்கு எதிர்ப்புக் கிளர்ச்சிகளும் வலுப்பெற்று வருகின்றன. இந்திமொழித் திணிப்பை எதிர்த்துப் பெரும் போராட்டம் நடத்த மராட்டியர்கள் சல்லடம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். தமிழர்கள் 1938-ல் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி நடத்திய காலத்தில் அதனை இழித்தும் பழித்தும் கூறியவர்கள் ஏராளம். ஆனால் அந்த எதிர்ப்புக் கிளர்ச்சியின் இன்றியமையாமையைப் பிறமொழிப் பகுதியினரும் இப்பொழுது உணர்கிறார்கள் என்பதோடு மட்டுமல்லாமல், தமிழகத்திலேயுள்ள காங்கிரஸ்காரர்கள் சிலரும் அதனை உணர்கிறார்கள் என்பதையும் அறியும்போது நாம் மகிழ்ச்சியுறாமல் இருக்கமுடியவில்லை. "வளமற்ற இந்திக்கு வாழ்வா?" என்று நாம் கேட்டோம்; இப்பொழுது இந்தியாவின் திக்கெட்டும் அந்தக் கேள்வி எழும்பத் தொடங்கிவிட்டது. இனி இந்தி ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கம் சிதைந்து சீரழியும் என்பது மட்டும் உறுதி.

ஃ ஃ ஃ

பக்தூனிஸ்தான் கோரிக்கை

பாக்கிஸ்தானிலிருந்து பக்தூனிஸ்தான் என்ற பகுதியைத் தனியே பிரித்துக்கொள்ள எல்லைப்புறத்தில் வாழ்கிற மக்கள் சென்ற சில ஆண்டுகளாகத் துடியாய்த் துடிக்கிறார்கள்; உரிமை வேட்கையை எழுப்புகிறார்கள். பாக்கிஸ்தானிலிருந்து பக்தூனிஸ்தானைப் பிரித்துக் கொடுக்காமலிருப்பது, பாக்கிஸ்தான் அரசியலாரின் அடாத போக்கை, ஆணவ எண்ணத்தை, எதேச்சாதிகார நடவடிக்கையைக் காட்டுவதாகும் என்று இங்குள்ள காங்கிரஸ் செய்தித்தாள்களும், காங்கிரஸ்காரர்களும் ஓயாமல் முழக்கமிட்டு வருகின்றனர். அத்தகையோர் திராவிடநாடு கோரிக்கையைப் புறக்கணிக்க முன்வரும்போது, எவ்வாறு அறிவை அடகு வைத்துவிட ஒருப்படுகிறார்கள் அல்லது தம் அறிவைக்கொண்டு சிந்திக்க மறந்துவிடுகிறார்கள் என்பது தெரியவில்லை.

பக்தூனிஸ்தானைத் தனி நாடாக்க, அதற்குத் தனிப்பெயர் கொடுக்க எல்லைப்புற காந்தி கபார்கான் எப்படி வாதிடுகிறார் என்பதை கா

க்கள் நண்பர்கள் உணர்வாளர்களாக; அதே உணர்வோடு திராவிட நாட்டையும் நோக்கு வார்களாக!

“பக்தூனியர்கள் தங்கள் நாட்டிற்கு ஒரு தனிப் பெயர் வேண்டுமென்கிறார்கள், பாக்கிஸ்தானில் ஐந்து சகோதரர்கள் வாழ்கின்றனர்; வங்காளம், பஞ்சாப், சிந்து, பலுசிஸ்தான், பக்தூனிஸ்தான் முதலியன உள்ளன. ‘வங்கம்’ என்ற சொல்லை உச்சரித்த உடனேயே மக்கள் புரிந்துகொள்கின்றனர், வங்கம் என்று ஒரு நாடு உள்ளது, அங்கே வங்காளிகள் வாழ்கிறார்கள் என்று. அதைப்போலவே சிந்து, பஞ்சாப் என்ற சொற்களும், ஆனால், பக்தூனியர்களான எங்களுக்கு ஒரு பெயர் இல்லையே!” என்று கபார்கான் அண்மையில் பாக்கிஸ்தான் பாராளுமன்றத்தில் வாதிட்டு நின்றார்.

ஃ ஃ ஃ

தன்மானக் கிளர்ச்சி

கிரேட் பிரிட்டனை ஆண்டுவரும் இரண்டாவது எலிசபெத் அம்மையார், இங்கிலாந்து ஸ்காட்லாந்து ஆகிய இருநாடுகளுக்கும் அரசியாவார். முதல் எலிசபெத் ஆண்ட காலத்தில், ஸ்காட்லாந்து இங்கிலாந்தோடு சேர்ந்திருக்கவில்லை, அது தனியாகவே இருந்துவந்தது; முதல் எலிசபெத் இங்கிலாந்தை மட்டுந்தான் ஆண்டுவந்தார்; ஸ்காட்லாந்துக்கு அரசியாக விளங்கவில்லை. இப்பொழுதுள்ள எலிசபெத் இங்கிலாந்துக்குத்தான் இரண்டாவது எலிசபெத்தே தவிர, ஸ்காட்லாந்துக்கு முதல் எலிசபெத்துதான். ஆனால் எலிசபெத் முடிசூட்டிக்கொண்ட பிறகு, ஸ்காட்லாந்தில் அரசாங்கப் பதிவுகள், அஞ்சல்வண்டிகள், பொது இடங்கள் ஆகியவற்றிலெல்லாம் இரண்டாவது எலிசபெத் என்றே பொறிக்கப்பட்டது. இதனைக் கண்ட ஸ்காட்லாந்து மக்கள் அரசியார், தங்களுக்கு முதல் எலிசபெத் ஆவாரே யொழிய, இரண்டாவது எலிசபெத் ஆகமாட்டார்கள் என்று கூறி, தன்மானத்தைக் காக்கப் பலவழிகளிலும் எதிர்த்துக் கிளர்ச்சிகள் நடத்தினர், ஸ்காட்லாந்து மக்களின் எண்ணம் இப்பொழுது நிறைவேற்றப்பட்டது; கோரிக்கை வெற்றிபெற்றது. எலிசபெத் என்ற பெயருக்கு முன்னால் உள்ள இரண்டாவது என்ற அடைமொழியை இனி ஸ்காட்லாந்தைப் பொறுத்த வரையில் எடுத்துவிட பிரிட்டிஷ் அரசியலார் முடிவுசெய்துவிட்டனர்.

கல்லக்குடிப் பெயர் மாற்றப் போராட்டத்தை ‘முட்டாள்தனம்’ (Silly) என்று கூறும் ஆச்சாரியாரும் அவரது தொண்டரடிப்பொடி ஆழ்வார்களும், ஸ்காட்லாந்து மக்களின் தன்மானப் போராட்டத்தைச் சற்று உற்றுக் கவனிப்பார்களாக! தெளிவு பெறுவார்களாக!

ஃ ஃ ஃ

பாக்கிஸ்தானிலும் திராவிடநாட்டுக் கிளர்ச்சி

வடநாட்டுத் தொடர்பினின்றும் நீங்கி, திராவிடநாடு, எப்படித் ‘தனி அரசு உரிமை’க் கூட்டாட்சியின் கீழ் அமையவேண்டும் என்று நாம் விரும்புகிறோமோ, அதுபோலவே, பாக்கிஸ்தானில், வங்கம், சிந்து ஆகிய இரு மாநிலத்திலும், மத்திய சர்க்காரின் பிடி தளர்த்தப்படவேண்டும் என்ற எண்ணம் வளர்ந்து வருகிறது, என்ற செய்தி, செய்தித்தாள்களில் இடம்பெற்றுள்ளது. வெளிநாட்டு விவகாரம், பாதுகாப்பு தவிர மற்ற எல்லாத் துறைகளிலும் ‘தனி அரசு’த் தன்மை பெற்றாக வேண்டும் என்று திட்டமிட்டு, வங்கமும், சிந்தும் வேலை செய்துவருகின்றன. ஏற்கனவே பக்தூனிஸ்தான் கிளர்ச்சி வேறு நடைபெற்றுக்கொண்டு வருகிறது. இந்தியத் துணைக்கண்டத்திலும், திராவிடநாட்டுக் கிளர்ச்சி போன்று, பிறபிற பகுதிகளிலும் தொடர்ந்து கிளர்ச்சிகள் மூளுவதற்கான அறிகுறிகள் ஆங்காங்கு அரும்பெடுத்து வருகின்றன. இந்தியத் துணைக்கண்டம் இனம்—மொழி—பொருளாதாரம்—நில அமைப்பு—பண்பு—பழக்கவழக்க வழி பல்வேறு துண்டுகளாகப் பிரிந்துபோகத்தான் போகும் என்பது மட்டிலும் உறுதி!

ஃ ஃ ஃ

நீர்வளிக் குண்டு

உலக வல்லரசு நாடுகளின் ஆட்சிப் பீடங்களில் ஏறியிருக்கும் ஆதிக்க வெறியர்கள்; அணுக்குண்டு என்றும், நீர்வளி(ஹைட்ரஜன்)க் குண்டு என்றும், உப்புவளி (நைட்ரஜன்)க் குண்டு என்றும் கண்டுபிடித்துத், தேர்வு நடத்தி, உலக மக்களைக் கதிகலங்க வைத்துக்

அட்டைப்பட விளக்கம் :

அவனியில் அறிவைப்பரப்பிய அச்சுப்பொறி

கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டில், ஐரோப்பாக் கண்டத்தில் அரும்பிப், பூத்துக் குலுங்கிய மறுமலர்ச்சிக் கருத்துக்கள், மாநிலமெங்கும் பரவி, மணங்கமழவும், இருண்ட உலகம் ஒளி பெற்ற உலகமாகத் திகழவும், பழைமையுலகம் புதுமையுலகமாக மாறவும், வைதீக உலகம் விஞ்ஞான உலகமாகக் காட்சியளிக்கவும், கோனாட்சிக் குடியாட்சியாக வளரவும், குறுகிய அறிவு விரிந்த அறிவாக மலரவும் உறுதுணை புரிந்த ஒரு பெரும் கருவி அச்சுப்பொறியாகும்!

அச்சுப்பொறி கண்டுபிடிக்கப்படாமலிருந்திருந்தால், உலகம், இவ்வள விரைவாகவும் அழகாகவும், இவ்வளவு எழிலாகவும் ஏற்றமாகவும், இவ்வளவு அறிவுமிக்கதாகவும் ஆராய்ச்சி செறிந்ததாகவும் ஆகியிருக்குமா என்பது ஐயப்பாடே! ஐயப்படவேண்டிய இன்றியமையாமைகூட இல்லை; ஆகியிருக்காது என்று தெளிவாகவேச் சொல்லிவிடலாம்!

உலகெங்கணும் உள்ள பகுதிகளில், ஆங்காங்கு சிறிதுசிறிதாகத் தேங்கிக்கிடந்து, வெளியார் யாருக்கும் பயன்படாமல் இருந்த அறிவு நீர்த்துளிகளை ஒன்றாக்கி, ஊற்றாக்கி, ஓடுகாலாக்கி, வாய்க்காலாக்கிச், சிற்றாறாக்கிப், பேராறாக்கி, அந்த அறிவு வெள்ளப் பெருக்கைக் கால்வாய்களாகப் பிரித்து உலகெங்கும் உள்ளக்கழனிகள் தோறும் பாயும்படிச் செய்த பெருமை அச்சுப்பொறி என்னும் சிறந்த பணியாளனுக்கே உரித்தாகும்!

முதன்முதல் அச்சுப்பொறியைக் கண்டுபிடித்து, உலகுக்கு ஈந்து, உலகை உவகையுறச் செய்த சீரியோன் ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த ஜான் கட்டன்பர்க் என்பானுவான். அவன் கி. பி. 1435-ம் ஆண்டில்தான் அச்சுப்பொறியைக் கண்டுபிடித்தான். முன்னோர்களின் பழக்கத்தில் இல்லாத ஒன்றை, வேத—புராண—சாஸ்திர—காவியங்களில் காணப்படாத ஒன்றைத் தான் கண்டுபிடிக்கலாமா என்ற அச்சத்திற்கு, அவன் தன்னை அடிமையாக்கிக் கொண்டிருந்திருந்தால், உலகம் எவ்வளவோ அளப்பரிய நன்மைகளை இழந்திருக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கும்! கட்டன்பர்க் கண்டுபிடித்த அச்சுப்பொறியில் முதன் முதல் அச்சியற்றப்பட்ட நூல், இலத்தீன் மொழிப் பைபிளாகும். அதன் பின்னர்தான் அச்சுப்பொறியின் சீரும் சிறப்பும், அவசியமும் அவசரமும், எழிலும் ஏற்றமும் ஐரோப்பிய மக்களால் உணரத் தலைப்பட்டன. ஜான் கட்டன்பர்க் மேயின்ஸ் என்ற இடத்தில்தான் அச்சுக்கூடத்தைத் தோற்றுவித்து வளர்த்துவந்தான். கி. பி. 1462-ம் ஆண்டில் மெயின்ஸ் நகரம் தாக்கப்படவே, அங்கிருந்த அச்சுத் தொழிலாளர்கள் அனைவரும் ஐரோப்பாவின் பல பகுதிகளுக்கும் சிதறியோடிப்போனார்கள். அதன் விளைவாக ஐரோப்பாவில் கலே, ரோம், பிளாரன்ஸ், வெனீஸ், நேப்பிள்ஸ் பல்கொனா, மிலான் ஆகிய இடங்களில் அச்சுக்கூடங்கள் தனித்தனியாக மலரத்தொடங்கின.

கொண்டிருக்கிறார்கள். ஆதிக்க வெறியர்களின் அடங்காப் பசிக்கு உலகமக்கள் அனைவரும் விரைவில் இரையாகிவிடுவார்களோ என்ற அச்சம் ஏற்படுகிறது. நெருப்பு, அதனைப் பயன்படுத்துவோனைப் பொறுத்து எப்படி நன்மையும் தீமையும் பயக்கவல்லதோ, அதுபோலவே அறிவியலும் அதனைப் பயன்படுத்துவோரைப் பொறுத்து நன்மையும் தீமையும் பயப்பதாக இருக்கிறது. அறிவியல் அறிஞர்களின் உள்ளம் நன்மையைத்தவிர தீமையை ஒருபோதும் நாடாது; ஆனால் அவர்களை ஆட்டிப்படைத்து, வேலை வாங்கி, தன் ஆதிக்க வெறியை நிறைவேற்றிக்கொள்ள, அறிவியலைத் தீமை வழிக்கு அழைத்துவரும்படிச் செய்பவர்கள் ஆதிக்க வெறியர்களேயாவர். உலகெங்கணும் உள்ள ஆதிக்க வெறியர்களை அகற்றி, அவர்களுக்குப் பதிலாகப் பண்புடையாளர்களை ஆட்சி இருக்கையில் ஏற்றப் பொதுசக்கள் முனைவார்களாக!

ஐரோப்பாவில் பெருகிய அச்சுக்கூடங்களில் ஒன்றை, அங்குச் சுற்றித்திரிந்த ஆங்கில வாணிகன் ஒருவன் இங்கிலாந்துக்குக் கொண்டுவந்து அதனை வெஸ்ட்மினிஸ்டர் அபே என்ற மாதா கோயிலில் நிறுவினான். அவன்தான் வில்லியம் காக்ஸ்டன்!

வில்லியம் காக்ஸ்டன் இங்கிலாந்தில், டென்டர் என்ற ஊரில் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவன். அவன் ஆரம்பப் பள்ளியில் சிறிதளவு பயிற்சியே பெற்றான். பிறகு, பதினொரு வயதாகும்போது, பள்ளிக்கூடத்தைவிட்டு, இலண்டனில் ஒரு பெரிய வாணிகரிடத்தில் வேலைக்கு அமர்ந்தான். பின்னர் நாளடைவில் வளர்ந்து, ஐரோப்பாக் கண்டத்தில் பர்ஜஸ் என்ற ஊருக்குச் சென்று மற்ற ஆங்கில வணிகர்களோடு தானும் வாணிபம் புரியத் தொடங்கினான். காக்ஸ்டன் தன் விடா முயற்சியாலும், ஊக்கத்தாலும், இங்கிலாந்தின் நான்காவது எட்வர்டு மன்னனின் அன்பையும், ஆதரவையும் பெற்று, வெளிநாட்டு ஆங்கில வணிகர்களின் குழுவுக்குத் தலைமை தாங்கினான். இதனால் காக்ஸ்டனுக்கு ஐரோப்பாவைச் சுற்றிப் பார்க்கும் வாய்ப்பும், எதைப்பற்றியும் நுண்ணறிவும் பொது அறிவும் பெறும் வாய்ப்பும் பெற்றான். இந்த நிலைமை அவன் சிறந்த எழுத்தாளன் ஆவதற்குப் பெரிதும் உதவி செய்தது. காக்ஸ்டன் பர்ஜஸ் நகரில் ஆங்கில அச்சுக்கூடம் ஒன்றை நிறுவி அதில் 'டிராய் நகர மக்கள் வாழ்க்கை' என்ற பிரெஞ்சு நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து கி. பி. 1474-ம் ஆண்டில், அச்சியற்றினான். ஆங்கிலத்தில் அச்சியற்றப்பட்ட முதல் நூல் இதுதான். பின்னர் 'செஸ்' விளையாட்டுப் பற்றிய நூல் ஒன்றை மொழிபெயர்த்து, அதனை 1476-ம் ஆண்டில் அச்சியற்றினான்.

வில்லியம் காக்ஸ்டன் தன் தாயகமாகிய இங்கிலாந்தில் அச்சகத்தை நிறுவ விரும்பி, அச்சுக்கூடத்தையும், அதனை இயக்குவதற்குத் தேவையான தொழிலாளர்களையும் அழைத்துக் கொண்டு இங்கிலாந்து ஏகினான். வெஸ்ட்மினிஸ்டர் மாதாகோயில் மண்டபத்தில் அச்சுக்கூடத்தை நிறுவி, கி. பி. 1477-ம் ஆண்டில் 'தத்துவ ஆசிரியரின் நீதிமொழிகள்' என்ற நூலை முதன் முதலாக இங்கிலாந்தில் அச்சடித்தான்.

இங்கிலாந்தில் முதன் முதலாக நிறுவப்பட்ட அச்சகத்தைப் பார்வையிட, நான்காவது எட்வர்டு மன்னனும், அரசியும் ஒருநாள் வந்தார்கள். வில்லியம் காக்ஸ்டன் அச்சுப்பொறி எப்படி வேலை செய்கிறது என்பதை அவர்களுக்கு விளக்கிக் காட்டினான். அந்தக் காட்சி தான் இவ்விதழின் அட்டைப்படமாக இலங்குகிறது.

காக்ஸ்டன் காலத்திலிருந்து நமது காலம் வரையில் உள்ள இடைக்காலத்தில், அச்சுப் பொறி, எவ்வளவு விரைவான மாற்றங்களோடு வளர்ந்துவந்திருக்கிறது என்பதை எண்ணிடும்போது வியப்புணர்ச்சி தோன்றுகிறது; அறிவியலின் ஆற்றல் தென்படுகிறது!

திராவிடரின் இலக்கியப் பூங்காவில் புதியமலர்!

வாயால் பதில் இல்லை—செயலால் பதில் செப்புகிறோம்-'அவாளின்' தனியுடைமை இனி எழுத்துத் துறையில் நடக்காது—கடையைக் கட்டிக்கொண்டு, தங்களின் சூதை சுருட்டிக்கொண்டு நடையைக் கட்டவேண்டியதுதான் என்று கூறும் முயற்சி. உலக மொழியில் உன்னத இடம் வகிப்பவர் பலரின் உயரிய சிந்தனை காவியங்களை சிறிய அளவில் சேர்த்துத் தரும் இலக்கியக் கதம்பமே—இந்த மாலை.

பூமாலை

(இலக்கிய திங்கள் வெளியீடு)

ஆசிரியர் :

தில்லை வில்லாளன்

(ராயல் 1/8 : 100 பக்கங்கள்)

விலை எட்டணு

ஆண்டு சந்தா ரூ. 6 அரையாண்டு ரூ. 3

இதழுக்கு எட்டணு முன்பணம் கட்டும் விற்பனையாளர் எங்கும் தேவை.

"பூமாலை"

அலுவலகம்,
சிதம்பரம்.

குன்றக்குடியாருக்குக் 'காணிக்கை!'-1

[இரா. நெ.]

திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி மகா சன்னிதானம்ஸ்ரீலஸ்ரீ அருணாசல தேசிக பரமாச்சார்ய சுவாமிகள், 'அருள் நெறித் திருக்கூட்டம்' என்ற அமைப்புக்குத் தலைவராக அமைந்து, சைவ சமயநெறியை, நாடெங்கும் பரப்புவதில், இதுநாளில் மிகவும் முனைந்து நின்று, மும்முரமாகப் பாடுபட்டு வருகிறார் என்பதைப் பலரும் அறிவர். அந்த மகாசன்னிதானத்தைத்தான் குன்றக்குடி அடிகளார் என்று சுருங்கிய முறையில் அழைத்துவருகின்றனர்.

தருமபுரம், திருவாவடுதுறை, திருப்பனந்தாள், குன்றக்குடி ஆகிய இடங்களில் வாழ்ந்து, வளர்ந்து, 'சைவ சமயநெறி' யாண்ட பண்டார சன்னதிகள் எப்படி 'அன்பு' பொருந்திய, 'அறம்' தழுவிய, 'ஒழுக்கம்' நிறைந்த 'நல்வாழ்வை' நடத்திவந்தனர் என்பதையும், அப்படிப்பட்ட 'நல்வாழ்வை' நடத்திவர அவர்களுக்குச் 'சைவநெறி' எப்படியெப்படியெல்லாம் வழிகாட்டிவந்தது என்பதையும், அவர்கள் எப்படியெல்லாம் 'சிவ' போதம் உண்டு, 'சக்தி' பூசை நடத்திப், 'பக்தி' இன்பத்தில் மூழ்கி இருந்தனர் என்பதையும் ஆங்காங்குள்ள மக்கள் நன்கு உணர்வார்கள்! அவர்களின் பட்டியலை இப்பொழுது விரித்துரைக்கவேண்டியதில்லை! இருந்த இடம் விட்டுப் பெயராமல், 'கல்லுப்பிள்ளையார்'போல் அபிஷேக ஆராதனைகள்பெற்றுப், பல்லக்கிலே பவனிவந்து, பாதகாணிக்கைபெற்றுச், சைவப் பேரின்பத்திலே எப்பொழுதும் மூழ்கிச், 'சோற்றாலடித்த பிண்டங்களாக'க் காட்சியளித்தவர்களைப்போலல்லாமல், குன்றக்குடியார் மக்களோடு நெருங்கிப் பழகுகிறார், நாடு நகரங்கள் பட்டி தொட்டிகளிலெல்லாம் சுற்றிவருகிறார் என்று கேள்விப்படுகிறோம்; அதுவரையில் மகிழ்ச்சி! தமிழ் தழைக்கவும், தமிழ் நாடெங்கும் பரவவும் பாடுபட்டுவருகிறார் என்று அறிகிறோம்; அதுவரையில் மகிழ்ச்சி! அவர் வளர்க்கும் 'அருள்நெறித் திருக்கூட்டம்' அன்பை வளர்க்க, அருளை வளர்க்க, அறிவை வளர்க்கப் பாடுபடுகின்றது 'என்றால்', அதுவரையில் மகிழ்ச்சி! ஆனால் அவர் அன்பும் அறிவும், அறமும் ஒழுக்கமும் சமயநெறியினரிடத்தில் மட்டுந்தாம் காணப்படும், சமயநெறிக்கு அப்பாற்பட்ட பகுத்தறிவு நெறியினரிடம் அவை காணப்படா என்ற கருத்துப்பட பேசியும், எழுதியும் வருகிறார்; அந்த வகையில் அவரோடு நாம் மாறுபடுகிறோம்! அவர்கருத்தை மதிக்க மறுக்கிறோம்!

"அன்பு பொருந்திய, அறந்தழுவிய, ஒழுக்கம் நிறைந்த நல்வாழ்வைக் கொடுக்குந் தகுதி சமயத்திற்கே உண்டு."

"சமயச் சார்பற்ற ஒழுக்கம் நிலைபெற்றிருத்தல் இயலாது"

"சமயவாழ் வொன்றாலேயே நீதியையும், நேர்மையையும், ஒழுக்கத்தையும் காக்கமுடியும் என்றுணர்ந்த தமிழ்மக்கள் சமய வாழ்வை மேற்கொண்டனர்."

என்று குன்றக்குடியார் 'சமய மறுமலர்ச்சி' என்ற தலைப்பின் கீழ் எழுதியுள்ளார். அன்பு பொருந்திய, அறந்தழுவிய, ஒழுக்கம் நிறைந்த நல்வாழ்வைக் கொடுக்குந் தகுதி 'சமயத்திற்கே' உண்டு என்று தேற்றப்பிரிநிலை ஏகாரம் போட்டுக் கூறிவிட்டார்! அந்தத் தகுதி சமயத்திற்கு மட்டுமே உண்டு, சமயச் சார்பற்ற பிற அமைப்புக்கு ஏற்படாது என்கிறார்!

பொதுவாக உலகத்தவர் சொல்லுகிறபடிக்கும், அகராதிகள் இயம்புகிறபடிக்கும், பார்த்தால், சமயம் என்றால், ஒரு ஆண்டவனையோ

அல்லது பல ஆண்டவர்களையோ நம்புவது, அவனை உருவம் அற்றவனாகக் கொண்டோ அல்லது உருவம் உடையவனாகக்கொண்டோ வணங்குவது, அவனுக்கு விருப்பமானவற்றைக் காணிக்கையாகச் செலுத்தி வழிபடுவது, ஆண்டவனிடம் வரம் கேட்பது, வரம் பலிக்கும் என்று கருதுவது, அவனிடம் குறையைச் சொல்லுவது நிறைவைப்பெறுவது, மோட்சம் நரகம் உண்டு என்று நம்புவது, நரகத்திற்குப் போகாமல் மோட்சத்திற்குப் போக அவனது துணையை நாடுவது, முற்பிறப்பு—மறுபிறப்பு ஆகியவற்றை நம்புவது, மறுபிறப்பு ஏற்படாமல் ஆண்டவனோடு இரண்டறக் கலக்க முயலுவது, ஆண்டவனோடு நெருங்கிய தொடர்பு கொள்ளக் கசிந்துருகிக் கண்ணீர்விட்டு வாழ்த்துப்பாடுதல், நோன்புகள் எடுத்தல், திருநீறு—உருத்திராக்கம் — நவமணி — திருநாமம்—சங்கு—சக்கரம்—துளசி — சிலுவை — பிறை போன்ற சின்னங்களைத் தரித்தல், ஆண்டவன் புகழ்பரப்புதல் போன்ற செயல்களைச் செய்வது போன்ற இவைகளை உள்ளடக்கிய ஒன்று என்று தெளிவுபெறப்படுவதாகும். சுருங்கக் கூறினால் மக்களுக்கும் ஆண்டவனுக்கும், உலகத்துக்கும் ஆண்டவனுக்கும் உள்ள தொடர்பு பற்றி அக்கறை செலுத்துவது சமயத்தின் இன்றியமையாத் தனித்தன்மையாகும். மக்களுக்கும் உலகத்துக்கும் உள்ள தொடர்பைப்பற்றியும் சமயம் பேசுகிறது என்றாலும், அது, முன்னைய தொடர்புகளிடத்துக் காட்டும் அக்கறை அளவுக்குப், பின்னைய தொடர்பினிடத்துக் காட்டுவதில்லை.

ஒரு அமைப்போ, அல்லது ஒரு கொள்கையோ அல்லது ஒரு நடவடிக்கையோ ஆண்டவனுக்கும் உலகத்துக்கும் 'இருக்கும்' தொடர்பைப்பற்றியும், ஆண்டவனுக்கும் மக்களுக்கும் 'இருக்கும்'தொடர்பைப்பற்றி கவலைப்படாமல், மக்களுக்கும் உலகத்திற்தும் இருக்கும் தொடர்பைப்பற்றி மட்டுமே கவலைப்படுவதாக அமைந்திருந்தால் அது சமயத்தன்மை அற்றது என்று கூறப்படுகிறது. எனவே சமயநெறியின் உயிர்நாடித் தன்மைகள் ஆண்டவனை நம்புவது, ஆண்டவனுக்கும் உலகம்—மக்கள் ஆகியவர்களுக்கும் உள்ள தொடர்பைப்பற்றி விளக்கங் கூறுவது, அந்த விளக்கத்திற்கு ஏற்றவாறு மக்கள் தங்களைத்தாங்களே தயாராக்கிக் கொள்ளும்படி செய்வது, அப்படித் தயாராக்கிக்கொள்வதற்கு உலக வாழ்வைப் பயன்படுத்திக் கொள்ளச் சொல்லுவது போன்றனவாகும்.

பகுத்தறிவு நெறி எனப்படுவது ஐம்புலனறிவுக்கும், ஆராய்ந்துகாணும் ஆறாவது அறிவாகிய பகுத்தறிவுக்கும் எட்டாத ஆண்டவன் மீதும், அவன் உலகம்—மக்கள் ஆகியவற்றோடு கொண்டுள்ள தொடர்பின்மீதும் நம்பிக்கை வைத்து அவற்றைக் கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்ளாமல், ஆறு அறிவின் நுகர்ச்சியால் ஆராய்ந்து காணப்படும் பொருள்களைப்பற்றி மட்டுமே கவலைப்பட்டு, ஆறு அறிவின் ஆராய்ச்சிக்கும் அகப்படாது நம்பப்படும் நிலையில் மட்டுமே இருக்கும் 'ஆண்டவன்' பற்றிய கருத்துக்களைப்பற்றிக் கவலைப்படாமல் செல்லும் நெறியாகும்.

சுருங்கக் கூறினால், ஆண்டவனை நம்பிச் செயலாற்றுவது சமயநெறி என்றும், இயற்கையை ஆராய்ந்து, அறிந்த அளவுக்குச் செயலாற்றுவது பகுத்தறிவு நெறி என்றும் கொள்ளலாம்.

குன்றக்குடியார் கூறுகிறார், ஆண்டவனை நம்பிச் செயலாற்றும் சமயநெறியினரிடத்து மட்டுந்தான் அன்பு, அறம், ஒழுக்கம் குடிகொள்ளும் என்று; அந்தப் பண்புகளை மக்களிடத்தே குடியேறச் செய்யும் தகுதி சமயநெறிக்கு மட்டுந்தான் உண்டு என்று! இந்தக் கூற்று எவ்வளவு உண்மைக்குப் புறம்பானது, எப்படிக் குறையறிவினைக் காட்டுவதாகும் என்பதை, இறந்தகால வரலாற்றையும், நடைமுறையுலகினையும் கூர்ந்து கவனிப்போர்க்கு இனிது விளங்கும்.

குன்றக்குடியாரின் கருத்துப்படி நோக்கினால், சைவம், வைணவம், வைதீகம், கிருஸ்துவம், இஸ்லாம், சமணம், புத்தம் போன்ற சமயங்கள் எழுதிவைத்துள்ள, நடைமுறையில் கையாண்டுவருகிற, அந்தந்தச் சமயத்தலைவர்கள் சொல்லிவருகிற சமயநெறிகளைக் கடைப்பிடிப்பவர்களிடத்தே மட்டுந்தான், அன்பு—அறம்—ஒழுக்கம்—நீதி—நேர்மை ஆகிய பண்புகள் காணப்படும் என்பதாகிறது. சமய நெறிகளைப் பின்பற்றாமல், சின்னங்கள் தரிக்காமல், ஆண்டவனைப்பற்றி நினைக்காமல், ஆண்டவனைத் தொழாமல், கோவிலுக்குச் செல்லாமல்; சடங்குகள் புரியாமல் ஒருவன் வாழ்ந்தால் அவனிடம்

அன்பு — அறம் — ஒழுக்கம் — நீதி — நேர்மை ஆகிய பண்புகள் காணப்படமாட்டா என்பதும் அடிகளார் கருத்தாகிறது. இது எத்துணை அளவுக்கு நடைமுறை உலகில் பொருந்திவருகிறது என்பதைக் கூர்மதி படைத்தோர் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

சிவபெருமானை முழுமுதற் கடவுளாக மனமார ஏற்று, விஷ்ணு, பிரம்மா, விநாயகர், சுப்பிரமணியர், இந்திரன், சந்திரன், சூரியன் போன்ற துணைக்கடவுளர்களையும் போற்றி, அவற்றிற்கெல்லாம் உருவங்கள் சமைத்து, அவற்றிற்கு அபிஷேக ஆராதனைகள் செய்து, தூபதீப நைவேத்தியங்கள் காட்டிப், படையல்கள் போட்டு, அவற்றிற்குக் கோயில்கள் எழுப்பிக், கும்பாபிஷேகங்கள் நடத்தித், தேர்த்திருவிழாக்கள்கொண்டாடித்,தாம் ஓயாமல் ஒழியாமல் திருநீறுபூசி, உருத்திராக்கக் கொட்டைகள் அணிந்து, நவமணிமாலை சூடி, 'சைவநெறிச் சீலர்கள்' என்ற பெயரோடு சைவச் சமய நெறியில் உலாவிவருபவர்களில், அன்பற்றவர்கள், அறமற்றவர்கள், ஒழுக்கமற்றவர்கள், நீதியற்றவர்கள், நேர்மையற்றவர்கள் எத்துணைப் பேர்கள் காட்டவேண்டும் என்று அடிகளாரை அறைகூவிக்கேட்கிறோம்? குன்றக்குடியிலும் சரி, தருமபுரம், திருவாவடுதுறை, திருப்பனந்தாள் ஆகிய மடங்களிலும் சரி, சைவசமயநெறி பரப்புவோராக இருந்த அத்துணைப் பண்டார சன்னதிகளிடத்தும் அடிகளார் கூறும் பண்புகள் அனைத்தும் தேங்கிக்கிடந்தனவா என்று கேட்கிறோம்? இப்பொழுது இருந்துவரும் பண்டாரசன்னதிகள், கட்டளைத் தம்பிரான்கள், எச்சிலைத் தம்பிரான்கள், கைலாகுத் தம்பிரான்கள், ஒடுக்கத் தம்பிரான்கள், கோவில் அர்ச்சகர்கள், கோவில் தர்மகர்த்தாக்கள், சைவ சமயப் பிரசங்கிகள், அருள்நெறித் திருக்கூட்டத்தார் அத்துணைப் பேரும் அடிகளார் கூறும் பண்புகளின் நிலைக்களங்களா என்று கேட்கிறோம்? சமயவாழ்வு ஒன்றுலேயே நீதியையும், நேர்மையையும், ஒழுக்கத்தையும் காக்க முடியும் என்ற கருத்தை நிலைநாட்டும் குன்றக்குடியாரே, மேற் கூறப்பட்டவர்கள் அத்துணைப்பேர்களையும் ஒழுக்கமுடையவர்கள் ஆக்கிற்று உமது சைவசமயநெறி என்று கேட்கிறோம்! சமயநெறிச் சார்பற்றவர்களிடம் அன்பு-அறம்-ஒழுக்கம்-நீதி-நேர்மை ஆகிய பண்புகள் இருந்தாலும் இல்லாவிட்டாலும், குன்றக்குடியாரின் கருத்துப்படி சமயவாழ்வு வாழ்வோரிடம் கட்டாயம் அந்தப் பண்புகள் இருந்து தீரவேண்டும்! சமயநெறி ஒன்றுக்குத்தான் அன்பு பொருந்திய, அறந்தழுவிய, ஒழுக்கம் நிறைந்த நல்வாழ்வைக் கொடுக்கும் தகுதி உண்டு, சமயம் தழுவாப் பகுத்தறிவு நெறிக்கு அந்தத் தகுதி இல்லை என்னும் கருத்துப்படத்தான் குன்றக்குடியார் கூறியுள்ளாரே! மக்களுக்கு ஒழுக்கங் கற்பிக்கும் ஆற்றல் முழுவதும் சமயத்திற்கே... உண்டு என்று 'ஏ'காரம் போட்டுச் சொல்லும் குன்றக்குடியாரே! சமையல்காரியின்கையைப் பிடித்து இழுத்த பண்டாரசன்னதிகளின் பட்டியல் வேண்டுமா? வேலைக்காரியைப் படுக்கை அறைக்கு இழுத்துச்சென்ற சன்னிதானங்களின் பட்டியல் வேண்டுமா? அங்காளம்மன் கோயில் பூசாரிக்கு மருமகனாகி, பூசாரியின் மகளுக்கு மாளிகை வசதியும், கார் வசதியும் செய்துகொடுத்து, வைரத்தோடு போட்டுப் பார்த்துப், பட்டுச்சேலை கட்டிப்பார்த்து, பூசாரியின் மகன் திருமணத்திற்குச் சீர்வரிசை செய்து, மகிழ்ந்திருக்கும் மகாசன்னிதானத்தைக் காட்டவேண்டுமா? பீடம் ஏறியிருந்த பண்டாரசன்னதிகளைக் கொன்றுவிட்டுத், தாம் பீடம் ஏறிக்கொண்ட தம்பிரான்களின் கதைகளைப் பொதுமக்களை விட்டுச் சொல்ல வைக்கவேண்டுமா? ஒழுக்கத்தில் ஐயம் ஏற்படும் அளவுக்கு வழக்கு மன்றங்களில் கொண்டு வந்து நிறுத்தப்பட்ட பண்டாரசன்னதிகளின் பட்டியல் வேண்டுமா? பண்டாரசன்னதிகளின் பீடத்துக்காக உயர்நீதிமன்றம், சுப்ரீம் கோர்ட் வரையில் ஓடியாடி அலைந்த சமயநெறி வாழ்ந்த தம்பிரான்களின் பட்டியல் வேண்டுமா? 'ஆண்டவன்' பெற்றெடுத்த பிள்ளைகளிற் சிலரை அடிமைப்படுத்தி, அவர்களைக் கூலிக்குப் பேசி, அவர்கள் தோளின்மீது பல்லக்கில் உட்கார்ந்துகொண்டு செல்வதே தமக்குத் தகுதியாகும் என்று கருதி, ஏறிச்செல்வதற்கு வேறு சாதனங்கள் இருந்த நிலையிலும், ஆட்களின்மீது உட்கார்ந்து செல்வதே 'அன்பின்' அடையாளம் என்ற முறையில் நாடெங்கும் பவனி வந்த—பவனிவரும் பண்டாரசன்னதிகளின் பட்டியல் வேண்டுமா? ஒழுக்கநெறிக்கு மாறுபட்டதும், நாட்டின் சட்ட வரம்பிற்கு முரண்பட்டதுமான கஞ்சாச் செடிகளைத் தம் தோட்டத்திலேயே பயிரிட்டு வளர்த்துவந்த மடாலயத்தின் பெயரைச் சுட்டிக்காட்டவேண்டுமா? கோயில்களில் உள்ள

'எல்லாம் வல்ல ஆண்டவன்' அணிந்திருந்த தங்க நகைகள், பிற வெள்ளிச் சாமான்கள், விலையுயர்ந்த கற்கள், வேறு பல பொருள்கள் ஆகியவற்றைத் திருடிக்கொண்ட அர்ச்சகர்களைக் குறிப்பிடவேண்டுமா? கோயில் சொத்துக்களைக் கொள்ளையடித்த கோயிற் பெருச்சாளிகளின் பட்டியலைத் தோழர் சி. எம். இராமச்சந்திரனார் மூலம் காட்டவேண்டுமா? எந்த நாமம் போடுவது, வடகலையா, தென்கலையா என்ற விவாதத்தில் இறங்கித், தடி அடி, வெட்டுக்குத்து நடத்தி, வழக்கு மன்றங்கள் ஏறி, வெள்ளைக்காரர்களிடத்தில் தீர்ப்பு வாங்கிக் கொண்ட 'சமயநெறி வாழ்வோரின்' பட்டியல் வேண்டுமா? யாருக்கு முதல் தீர்த்தம் என்ற போட்டியில் வெட்டி மடிந்த சமயச் சார்புடைய குடும்பங்களின் வரலாறு வேண்டுமா? சமணர்களைச் சைவர்களும் வைணவர்களும், சைவர்களை வைணவர்களும், வைணவர்களைச் சைவர்களும், இந்துக்களை முஸ்லீம்களும், முஸ்லீம்களை இந்துக்களும், கிருத்தவர்களை முஸ்லீம்களும், முஸ்லீம்களைக் கிருத்தவர்களும் வெட்டிப்போட்டும், தீயில் வேகவைத்தும், கழுவிலேற்றியும், கற்களால் அடித்தும் 'சமய வாழ்வை' நடத்திக்காட்டிய வரலாறுகள் வேண்டுமா? சமயநெறியில் நின்று ஆட்சிப் புரிந்தோர் பிற சமயத்தார்க்குப் புரிந்த கொடுமைகள், இழைத்த அநீதிகள், செய்த நேர்மையற்ற செயல்கள் ஆகியவற்றின் பட்டியலை விரிக்க வேண்டுமா? மற்றைய காலங்களில், மற்றையோரிடத்தில், அடிகளாரே! நீர் கூறும் பண்புகள் அமைந்திருந்தாலும் இல்லாவிட்டாலும், உம்முடைய மேற்பார்வையில், சமயநெறி வாழ்வில் வளர்ந்துவரும் அருள்நெறித் திருக்கூட்டத்தார் அனைவரிடத்தும், அந்த அரும் பண்புகள் நிலைக்களனாய் நின்று இலங்குகின்றனவா? அருள்நெறித் திருக்கூட்டத்தின் முக்கிய செயலாளர்கள் இருவரிடத்தாவது அன்பு—அறம்—ஒழுக்கம்—நீதி—நேர்மை ஆகிய பண்புகள் எல்லாத் துறைகளிலும் எப்பொழுதும் நின்று நிலவிவந்திருக்கின்றன என்று அவர்களின் சொந்த ஊர்க்காரர்களாவது துணிந்து சொல்லுவார்களா? இவ்வளவையும் சுட்டிக் கேட்பதற்குக் காரணம், சமயநெறி வாழ்வோரிடத்து மட்டுமே அரும் பண்புகள் நிலைக்கும் என்றும், அரும் பண்புகளை நிலைநிறுத்தும் தகுதி சமயத்திற்கே (?) உண்டு என்றும் குன்றக்குடியார் கூறியுள்ளதால்தான். மேற் சுட்டிக்காட்டப்பட்ட அனைவரும் சமயநெறிக்குப் புறம்பானவர்கள் என்று அடிகளார் கூறிவிடமுடியாதே! குன்றக்குடி, தருமபுரம், திருவாவடுதுறை, திருப்பனந்தாள் ஆகிய இடங்களில் இருந்த—இருக்கிற பண்டாரசன்னதிகள் தம்பிரான்கள் எல்லோரும் சமயநெறி வாழ்ந்தோர்—வாழ்வோர் அல்லர் என்று குன்றக்குடியார் அவ்வளவு துணிந்து கூறிவிடமுடியாதே! அல்லது அவர்கள் அத்தனைபேரும் ஒழுக்கத்தின் உயர்மணிமுடிகள் போன்றவர்கள் என்று நிலைநாட்டிப், பொதுமக்களின் கண்பார்த்தைக், காது கேட்டதைக் குன்றக்குடியார் பொய் என்று புகல முன்வருவாரா?

இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுவதற்கு "நல்லூழ் இன்மையே காரணம்" என்று நவின்றிடக், குன்றக்குடியார் முனைவாரேல், ஒழுக்கத்தை மக்களிடத்தே நிலைநாட்டுவதும், நிலைநாட்டாமற் போவதும் முறையே 'நல்லூழும்', 'நல்லூழின்மையுமே' ஆகுமே தவிர சமயநெறிக்கும் ஒழுக்கத்திற்கும் தொடர்பில்லை என்ற முடிவுக்கு அவர் வரவேண்டும். அப்படியானால் ஒழுக்கத்தை—நல்வாழ்வைத் தரும் தகுதி, சமயத்திற்கே (!?) உண்டு என்ற கூற்று அறியாமையின்பாற்பட்டதாகும். நல்வாழ்வு தரும் தகுதி சமயத்திற்கே உண்டு என்பதை நிலைநாட்டுவாரேயானால், நல்வாழ்வு இன்மைக்குச் சமய வாழ்வு இன்மையைத்தான் காரணம் காட்ட வேண்டுமேயல்லாது, நல்லூழின்மையைக் காரணமாக்கக் கூடாது. நல்வாழ்வுக்குச் சமயம், நல்லூழ் ஆகிய இரண்டையும் காரணமாக்கி, நல்வாழ்வு இன்மைக்குச் சமயவாழ்வின்மை, நல்லூழின்மை ஆகிய இரண்டையும் காரணமாக்குவாரேயானால், சமயத்திற்கே 'தகுதி' உண்டு என்று தேற்று 'ஏ'காரம் போட்டுச் சொல்லவேண்டியதில்லையே!

(தொடரும்)

ஆடும் ஆச்சாரியார்

ஆசிரியர்:

மீ. சு. இளமுருகு பொற்செல்வி

விலை அணா 8

கிடைக்குமிடம்:

நம்நாட்டுப் பண்ணை,

மணப்பாறை, திருச்சி மாவட்டம்.

நல்ல ஆவிகளும் கெட்ட ஆவிகளும்

[தமிழாக்கம் : இரா. நெடுஞ்செழியன்]

நமது முன்னோர்கள், வான இருளில், மனித சமுதாயத்திற்கு மாறுபாடான கெட்ட ஆவிகள் வாழ்ந்தன என்று கருதியதுபோலவே, நல்ல ஆவிகள் பலவும் உலாவின என்றும் நம்பினர். கெட்ட ஆவிகள் சாத்தானிடம் எப்படிப்பட்ட உறவைக் கொண்டிருந்தனவோ, அதேவிதமான உறவைத்தான், நல்ல ஆவிகள், கடவுளிடம் கொண்டிருந்ததாக அவர்கள் கருதினர். கெட்ட ஆவியின் ஆசை வார்த்தைகளினின்றும், தூண்டுதல்களினின்றும், பயபக்தி உடையவர்களைக் காப்பாற்றுவதே நல்ல ஆவிகளின் தொழில். யார்யார் தாயத்துக்களைக் கட்டிக்கொண்டும் மந்திரங்களை செபித்துக் கொண்டும், வழிபாட்டுரைகளைச் சொல்லிக் கொண்டும் செபமணிகளை உருட்டிக்கொண்டும், நோன்புகள் எடுத்துக்கொண்டும் சடங்குகள் செய்துகொண்டும் இருந்தார்களோ அவர்களைப் பற்றி அந்த நல்ல ஆவிகள் கவலை செலுத்தி, அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்தன என்றும் நம்பப்பட்டது. பயபக்தி உடையவர்களின் மார்பில் வாள் வீசப்பட்டாலோ அல்லது அம்பு பாய்ச்சப்பட்டாலோ, உடனே அந்த நல்ல ஆவிகள் சென்று அவைகளைத் தடுத்து நிறுத்தி, அவர்களுக்கு நன்மை செய்யும் என்றும் கருதப்பட்டது. உண்மை நம்பிக்கையாளரைப் பொறுத்து, அவைகள், நஞ்சைக் கெடுதியற்றதாக ஆக்கவும், அறியாத்தன்மைக்குப் பாதுகாப்பாக இருக்கவும், வேறு ஆயிரக்கணக்கான வழிகளில் மக்களுக்கு ஆதரவு தரவும், மீட்சி கொடுக்கவும் ஆன தொண்டுகளைப் புரிந்து வந்தன என்றும் கொள்ளப்பட்டது. அவைகள், பயபக்தியுடையவர்களின் உள்ளத்திலிருந்த ஐயப்பாடுகளைப் போக்கின; அவர்களுடைய உள்ளத்தில் அறியாத்தன்மை பயபக்தி ஆகியவிதைகளைத் தூவின; பெண்களின் ஆசை வலைகளினின்றும் மகான்களை மீட்டன; உண்ணா நோன்பு இருந்தும் வழிபாட்டுரை கூறியும் வாழ்ந்துவந்தவர்களுக்காக, மோட்ச லோகத்தின் தன்மைகளை விளக்கிக்கூறின; பயபக்திகொண்ட நல்லவர்கள் உணர்ச்சி இன்பங்களை மறக்கச் செய்யவும், சாத்தானை வெறுக்கச் செய்யவும் பேருதவி புரிந்தன என்றெல்லாம் நம்பப்பட்டன.

அந்த நல்ல ஆவிகள், ஞானமுழுக்கு செய்யப்பட்ட குழந்தைகளை ஓம்பின; புனித சூளுரைகளுரைத்தவர்களுக்குப் பாதுகாப்பு அளித்தன; கடவுளை நம்பின புரோகிதர்கள், சந்நியாசினிகள், நாடோடிப் பிச்சைக்காரர்கள் ஆகியவர்களைக் காப்பாற்றிவந்தன!

இந்த நல்ல ஆவிகளிலும் பலவகைகள் இருந்தன! சில ஆண்களாகவும் பெண்களாகவும் இவ்வுலகில் வாழ்ந்திருந்தன; சில இவ்வுலகில் வாழ்ந்ததேயில்லை; சில ஆரம்பகாலத்திலிருந்தே தேவதைகளாக இருந்தன! அவைகள், சரியாக, எப்படிப்பட்டவைகள் என்பது பற்றியோ, அல்லது அவைகள் எப்படித் தோற்றமளித்தன என்பதுபற்றியோ, அல்லது அவைகள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எவ்வழியாகப் போயின என்பது பற்றியோ, அல்லது அவைகள் எப்படி மனிதர்களின் உள்ளத்தைப் பாதித்தன அல்லது உள்ளத்தின்மீது ஆதிக்கம் செலுத்தின என்பதுபற்றியோ திட்டவட்டமாகக் கூறினவர்கள் யாருமில்லை!

கெட்ட ஆவிகளுக்கெல்லாம் அரசன் சாத்தான் என்றும், நல்ல ஆவிகளுக்கெல்லாம் அரசன் கடவுள் என்றும் நம்பப்பட்டன. உண்மையில் பார்க்கப்போனால், கடவுள்தான் எல்லாவற்றிற்கும் அரசன் என்றும், சாத்தான்கூட ஆண்டவனின் பிள்ளைகளிலே ஒருவன் என்றும் நம்

பட்டன. இந்தக் கடவுளும் இந்தச் சாத்தானும் மனிதர்களின் 'ஆன்மாக்'களை வசப்படுத்திக்கொள்வதில் போட்டி போட்டுக்கொண்டு, போரில் ஈடுபட்டனர்! கடவுள் அழியாப் பேரின்பத்தைப் பரிசுகளாகக் கொடுத்து, அழியா நரகவேதனைகளைப்பற்றி அச்சுறுத்திவந்தார்! சாத்தான் இவ்வுலக இன்பத்தை அளித்து, உணர்வுகளுக்கெல்லாம் நுகர்ச்சியைக் கொடுத்துக், காதல் விளையாட்டுகளையெல்லாம் காட்டி, மோட்ச உலகத்தின் மகிழ்ச்சியைப் பார்த்தும் நரகத்தின் வேதனைகளைப் பார்த்தும் சிரித்தான்! அவன், தன் குற்றக்கையால் ஐயவினைகளைத் தூவினான். மக்களை ஆராய்ச்சி செய்யும்படியும், பகுத்தறியும்படியும், சான்றுகாணும்படியும், தன்னம்பிக்கைக் கொள்ளும்படியும் தூண்டினான்; மக்களின் இதயத்தில் விடுதலைவேட்கையன்பை ஊன்றினான்; விலங்குகளை உடைத்தெறிய அவர்களுக்கு உதவி செய்தான்; சிறைக்கூடங்களிலிருந்து தப்பி ஓட அவர்களுக்கு வழி கற்பித்தான்; அவர்களைச் சிந்திக்கும்படி வற்புறுத்தினான்! இந்த வழிகளில் அவன் மக்களாகிய குழந்தைகளைக் கெடுத்தான்!

வழிபாட்டுரையால், பலியால், உண்ணாநோன்பால், சிலபல சடங்குகளைச் செய்வதால், கடவுளின் உதவியையும் நல்ல ஆவிகளின் உதவியையும் பெற்றுவிடலாம் என்று நமது தந்தைமார்கள் நம்பிவந்தனர். அவர்களுடைய வாதம் போதுமான ஆன்ற அறிவு படைத்ததாக அமைந்திருக்கவில்லை. கேடுகள் அனைத்திற்கும் மூலகாரணம் சாத்தான்தான் என்பதை அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. வெள்ளமும் வறுமையும், பிளேக்கும் புயலும், நில அதிர்ச்சியும் போர் முயற்சியும், சில சமயங்களில், நம்பிக்கை யிழந்தவர்களுக்குத் தண்டனை கொடுக்க, ஆண்டவனால் அனுப்பப்பட்டவை என்று அவர்கள் எண்ணினர். அந்தக் கொடுமைகளைத் தடுக்கும்படி, முழங்காற்படியிட்டுக் கொண்டு, வெளுத்த உதடுகளால் வழிபாட்டுரை கூறிக், கடவுளை வேண்டிக்கொண்டனர். அவர்கள் தங்களைத் தாங்களே தாழ்த்திக் கொண்டனர்; தாங்கள் செய்த பாவங்களை ஒப்புக்கொண்டனர்; சூளுரைகளாலும் வேண்டுதல்களாலும் வானவெளியை நிரப்பினர். புரோகிதர்களுடைய உதவியைக்கொண்டும், வழிபாட்டுரைகளின் உதவியைக்கொண்டும் பிளேக்கை அகற்ற முயன்றனர். அவர்கள் புனித நினைவுக்குறிகளை முத்தமிட்டனர்; கோயில்கள் தோறும் விழுந்தெழுந்தனர்; அன்னை மேரி, அருமை மகான்கள் ஆகியோரின் ஆதரவை வேண்டினர்; ஆனால் வழிபாட்டுரைகளெல்லாம் இதயமற்ற காற்று வெளியில் இறந்தொழிந்தன; பிளேக் அதன் வலிமை முழுவதும்காட்டி உலகை அழிக்கவே செய்தது! நமது அறிவிற் குறைவுடைய தந்தைமார்கள், அறிவியலைப் பற்றி ஏதும் அறிந்திருக்கவில்லை. எல்லா நிகழ்ச்சிகளுக்கும் அடிப்படைக் காரணங்களாக, அவர்கள், நல்ல ஆவிகளையோ அல்லது கெட்ட ஆவிகளையோ, தேவதைகளையோ அல்லது பிசாசுகளையோ, கடவுள்களையோ அல்லது பூதங்களையோ வைத்தனர். ஒவ்வொரு நிகழ்ச்சியும் இயற்கைக் காரணம் ஒன்றைக் கொண்டிருந்தது என்பதை அவர்கள் உணரவில்லை. எல்லாம் ஆவிகளின் வேலைப்பாடுகளே என்று கருதினர். எல்லாம் இயற்கைக்கு மீறிய கடவுளால் நடந்தேறுகின்றன என்று எண்ணினர். அழிவை உண்டாக்குவது, தண்டனையை அளிப்பது, தவறச்செய்வது, மக்களாகிய குழந்தைகளைப் பாழ்படுத்துவது போன்ற செயல்களெல்லாம் கெட்ட ஆவிகளால் நிகழ்த்தப்பட்டன என்று நம்பினர். இந்த உலகம் ஒரு போர்க்களமாகத் திகழ்ந்தது; இங்கே மோட்ச உலகத்தைச் சேர்ந்தவர்களும், நரக உலகத்தைச் சேர்ந்தவர்களும் போர் தொடுத்துக்கொண்டனர்!

பலம் வேண்டும்

நமக்கு வேண்டிய ஒரே பொருள் பலமே. உலகத்தின் நோய்க்கு மருந்தும் பலமே. பணக்காரரது கொடுமைக்கு உட்படும்போது ஏழைகட்கு அவசியம் வேண்டிய மருந்தும் பலமே. கற்றோரது கொடுமைக்கு உட்படும்போது கல்லாதவர்க்கு அவசியம் வேண்டிய மருந்தும் பலமே.

—விவேகானந்தர்.

'மன்றம்' சந்தா விபரம்

	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	6—0—0	7— 8—0
ஆறுமாதம் ,, ,,	3—0—0	3—12—0
தனி இதழ் ,, ,,	0—4—0	0— 5—0

மானம் காத்த மன்னன்

[எழினி]

மேற்கத்திய நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தமிழகம், இன்றைய நிலையில், எல்லாத் துறைகளிலும், மிகத் தாழ்ந்து கிடக்கிறது என்றாலும், பண்டைக்காலத்தில், அது சீரும் சிறப்பும் பெற்று, ஒப்புயர்வற்று, செல்வச்செழிப்போடு விளங்கிற்று என்பதை, உலக வரலாற்று ஏட்டுச் சுவடிகள் இனிது எடுத்தியம்பக் காண்கிறோம். பண்டைக்காலம், பண்டைக் காலம் என்னும்போதெல்லாம், நாம், ஆயிரத் தெண்ணூறு ஆண்டுகளுக்குமுன் நிலவிய சங்க காலத்தைத்தான் நினைவுபடுத்திக்கொள்கிறோம். அத்துணைப் பழங்காலத்தை நாம் அடிக்கடிக் காண விரும்புவதற்குக் காரணம், தமிழகம் அன்று கொண்டிருந்த உயர்பண்புகளை, நமது நினைவுக்குக் கொண்டுவருவதன் மூலம், வீழ்ச்சியுற்ற இன்றைய தமிழகத்திற்கு எழுச்சியூட்ட வேண்டும் என்ற எண்ணத்தினாலேயேயாகும்.

பண்டைத்தமிழகத்தின், போற்றுவதற்குரிய சீரிய பண்பை, நினைவிற்குக் கொண்டுவந்து, வாழ்க்கையில் நிலைநாட்டுவதன்மூலம், நாம் புதியதொரு மறுமலர்ச்சியை மலர்விக்க முயலுகிறோம். அந்த வகையில் பண்டைத் தமிழ் மக்களின் சில வரலாற்றுக் குறிப்புகள் சிறந்த எடுத்துக்காட்டாக இலங்குகின்றன. அவற்றில் மானங்காத்த மன்னன் ஒருவனின் வரலாற்றைக் காண்போம்.

சேரமான் கணைக்காலிரும்பொறை சேரமண்டலத்தை ஆண்டுவருகிறான். படைவளமும், குடிவளமும் போற்றுவதற்குரிய வகையில் அவனிடம் பொலிந்து காணப்படுகின்றன. அவன் வில்லேர் உழவனாக மட்டும் இருக்கவில்லை; சொல்லேர் உழவனாகவும் காட்சியளிக்கிறான். பழமரத்தை நோக்கிப் பறந்துசெல்லும் பறவைகள்போல் புலவர்கள் அவன் இருப்பிடம் நோக்கி வந்துகொண்டேயிருக்கிறார்கள். நாடு நகரங்கள், பட்டி தொட்டிகளெல்லாம் ஓயாமல் சுற்றிக்கொண்டிருக்கும் புலவர்கள், இரும்பொறையின புகழையும், பெருமையையும் பாடிச் செல்கிறார்கள். இரும்பொறையின் புகழ் சேரமண்டலத்தில் மட்டுமல்லாமல், பாண்டிமண்டலத்திலும், சோழமண்டலத்திலும் சிறந்தோங்கிப் பரவுகிறது.

அதேபொழுது சோழமண்டலத்தைக் கட்டி ஆண்டுவருபவன் சோழன் செங்கணான். அவனது வீரமும் வெற்றிச் செயல்களும், திக்கெட்டும் அதிரச்செய்கின்றன. அவனும் புலவர்களால் புகழ்ந்து பாடப்பெறும் தன்மை வாய்ந்தவனாக இருக்கிறான். இரும்பொறை—செங்கணான் ஆகிய இருவரில் யார் உயர்ந்தவன் என்று சொல்லமுடியாத வகையில், இருவரும் ஓங்குபுகழ் எய்திவருகிறார்கள்.

சேரன்-சோழன் ஆகிய இருவர்க்கிடையே பகைமையுணர்ச்சி புகையத்தொடங்குகிறது. இருவரும் ஒருவரையொருவர் அழித்துத் தத்தம் செல்வாக்கை மட்டுமே அவனியில் நிலைநாட்ட விரும்புகின்றனர். இருவருடைய உள்ளத்தே புகைந்துகொண்டிருந்த பகைமையுணர்ச்சி நாளடைவில் கொழுந்துவிட்டெரிய ஆரம்பிக்கிறது. இருசாராரிடமும் நால்வகைப் படைகளும் ஆயத்தமாகின்றன. இருவேந்தர்களும் வாள் முனையில் தம் வலிவைக் காட்டிவிடுவது என்ற எண்ணத்தில், போருக்கு முழக்கமிட்டுச் சீறி எழுகின்றனர். குமுறும் இரண்டு எரிமலைகளும் வெடிக்கத்தொடங்குகின்றன!

இரு பெரும்படைகளும் களத்திலே ஒன்றையொன்று எதிர்க்கின்றன. போரொலி திக்கெட்டும் அதிர, வாளோடுவாள் பேச, மணி முடிகள் சிதற, மண்டைகள் பிளக்கப், பிணமலைகள் குவியக், குருதியோட்டம் ஓட, குதிரைகள் சாய, யானைகள் வெருண்டோடத், தேர்கள் சுக்குநூறாகச், செந்தூள் பறக்கக் கடும்போர் நடக்கிறது. இறுதியில், சேரன் படையைச் சோழனுடைய படை தாக்கித் தகர்த்து முறியடிக்கிறது. சேரமான் கணைக்கா லிரும்பொறை, சோழனது படைவீரர்களால் பிடிக்கப்பட்டுச், சோழ மன்னன் செங்கணான் முன்னால் கொண்டுவந்து நிறுத்தப்படுகிறான்.

இரும்பொறை, வீரர்களின் கட்டுக்ககப்பட் டிருத்தலால், ஏதும் செய்ய இயலாதவனாய் உடல் துடிக்கப், பற்கள் நறநறவென்று கடிக்கக், கண்கள் நெருப்புப்பொறியைக் கக்கச் செங்கணானை ஆத்திரத்தோடு உற்று நோக்கிக் கொண்டிருக்கிறான். சோழன் செங்கணான் வெற்றிபெற்றிருக்கும் பெருமிதத்திலே, புன் சிரிப்புச் சிரித்துக்கொண்டு, கடைக்கண் ஒதுக்கிக், கேலிப்பார்வையால் இரும்பொறையைப் பார்க்கிறான்.

இரும்பொறை துடிதுடித்துக்கொண்டு நிற்பதைக் கண்ட சோழன், "ஏன் இந்த நாய் துள்ளிக் குதிக்கிறது?" என்று கேட்டுச் சிரித்துவிட்டு, "என்னை யார் என்று தெரிந்து கொள்ளாமல் என்னோடு மோத வந்த நயவஞ்சக நரியே! எங்கே உன் சிறப்பும், செருக்கும்? சோழ மண்டலத்தை அழிக்க வந்த சூரப் புலியே? எங்கே உன் வீரம்?" என்று கேலிக் குரலில் கேட்கிறான்.

இரும்பொறை சோழனின் சுடு சொற்கள் தாங்கமாட்டாமல் துள்ளி எழுந்து, எம்பிக் குதிக்கிறான். வீரர்கள் அவனைச் சங்கிலியாற் பிணைத்து, இழுத்துப் பிடித்து, அழுத்தி நிறுத்துகிறார்கள்.

"வீரர்களே! இந்த வீணனை என் எதிரிலே நிறுத்தவேண்டாம்! இக்கக் கோழையை இவ் விடத்தைவிட்டு அகற்றுங்கள்! நாயைப்பிடித்து இழுத்துச் செல்வதுபோன்று, இவனை இழுத்துச் சென்று சிறைச்சாலையிலே தள்ளுங்கள்! கொடுமைகள் நிறைந்த குடவாயிற் கோட்டத்துச் சிறைச்சாலையிலே தள்ளுங்கள்!" என்று சோழன் செங்கணான் கட்டளையிடுகிறான். வீரர்களும் இரும்பொறையை அழைத்துக் கொண்டு ஏகுகிறார்கள்.

வீரர்கள் தூவும் ஏசலும் எள்ளமும், நாற்புறமுமிருந்தும் வந்து, இரும்பொறையின் உள்ளத்தைக் குத்திக் குடைகின்றன. இரும்பொறை என்ன செய்யமுடியும்! அவனோ சங்கிலியாற் பிணிக்கப்பட்டுக் கற்றூணோடு கட்டப்பட்டிருக்கிறான்! படைவீரர்கள் அடித்து உதைத்து அலங்கழித்து அழைத்து வந்ததன் காரணமாக, இரும்பொறை சோர்ந்து, நைந் கிடக்கிறான்; அவன் நாக்கு வறட்சி கொள்கிறது; தலையோ சுற்றுகிறது; கண்களோ சுழல்கின்றன! இது வரையில் காணாத துன்பங்களையெல்லாம் அவன் காண நேரிடுகிறது. அவற்றையெல்லாம் எப்படித் தாங்கிக்கொள்வது என்று அவனுக்குத் தெரியவில்லை. தாங்கிக்கொள்ளமுடியாத துயரம் அவனைத் தாக்குகிறது. தன்னையறியாமலேயே அவன் வாய்விட்டு அலறுகிறான், "தண்ணீர்! தண்ணீர்!" என்று.

வீரர்கள் அங்கே நடைபோட்டு உலாவிக் கொண்டிருக்கிறார்கள். இரும்பொறையின் கூச்சலை யாரும் பொருட்படுத்தாமல், அவரவர் கவலையைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

"தண்ணீர்! தண்ணீர்! குடிக்கத் தண்ணீர்!" என்று உரத்துக் கதறுகிறான், மண்டலமாண்ட மன்னன் சிறையிலேகிடந்து.

சிறைக்காவல் புரிவோர் அவனை எள்ளப் போக்கிலே பார்க்கிறார்கள். மாற்றரசன் கட்டுண்டு கதறித் துன்புறுவது அவர்களுக்கு இன்பமூட்டும் காட்சியாக இருக்கிறது! மன்னவ ஓயாமல் கதறுகிறான். சிறிது இளகிய மனமுடைய வீரன் ஒருவன், சிறு குவளையில் தண்ணீர் ஏந்திவந்து, எள்ளத்தோடும் எக்களிப்போடும், தனது இடத்துகையால் நீட்டுகிறான். மன்னன் அதனை ஆவலோடு வாங்குகிறான். வாங்கி வாயினருகில் கொண்டுபோகும் போது, அவன் மனதில் ஏதோ படுகிறது. வாயினருகே வந்தகை, சிறிது அகன்றுபோய்க், குவளையை ஏந்தியவண்ணம் அப்படியே அசைவற்றுப் போகிறது; அவன் விழித்த விழிகளும் ஆடாமல் அசைவற்றுத் தரையை உற்று நோக்குகின்றன; அவன்நீடு சிந்தனையில் ஆழ்கிறான்.

"ஆகா! எவ்வளவு மானங்கெட்ட செயலைச் செய்கிறோம்! இதைப்போன்ற மானங்கெட்ட

செயலை வேறு எந்த அரசனாவது செய்வானா? ஆகா! எவ்வளவு இழிந்த நிலையில் கிடக்கிறோம்! மறவர் நாம் மன்னர் குடியில் பிள்ளையொன்று செத்துப் பிறந்தாலும், அல்லது தசைப்பிண்டமே பிறந்தாலும், அவற்றை ஆள் அல்ல என்று கருதாமல், அவற்றை வீரர்கள் என்றே கருதி, அவ்வீரர்கள் வாள்காயம் படாமல் கோழைகளாகச் சாவது மறக்குடியினர்க்கு இழுக்குப் பயப்பதாகும் என்று எண்ணி, அவற்றை வாள்கொண்டு வெட்டிய பிறகு புதைப்பதையல்லவா சிறப்பாகக் கொள்வர்! ஆனால், நம் நிலை! எண்ணினாலே வெட்கமும் துக்கமும் உள்ளத்தைக் குடைகின்றனவே! நாமோ மறவர் குடியில்பிறந்த ஒரு தசைப்பிண்டம் பெறும் சிறப்பைக்கூடப் பெறாமல், இழிநிலையில் வாழ்கிறோமே! பகைவரின் வாளால் வெட்டுண்டு இறந்துபடாமல், சங்கிலியாற் பிணிக்கப்பட்ட நாய்போல, இழுப்புச் சங்கிலியிலே பிணிக்கப்பட்டுக் கிடக்கிறோமே! கேலியும் கொடுமையும் செய்யும் பகைவரின் தயவால், கெஞ்சிக்கேட்ட பிறகு வந்த தண்ணீரை இரந்து உண்ணமாட்டோம் என்று சொல்லக் கூடிய மன வலிமையைப் பெறாத இழிமகனாக அல்லவோ நாம் இருக்கிறோம்! வயிற்றில் ஏற்படும் பசித்தீயைத் தணிக்கவேண்டி நம்மைப் போல் இரந்துண்ணும் செயலைச் செய்பவர்களை, வீரமறக்குடியிற்பிறந்த மன்னர்கள், இவ்வுலகின்கண், எவரேனும் இருப்பார்களா? ஒருக்காலும் இருக்கமாட்டார்கள்! ஒருவரும் இருக்கமாட்டார்கள்!'' என்று சிந்தித்துக்கொண்டே வரும்போது, சிந்தனையோட்டத்தை திடீரென்று நிறுத்தி, அரசன் இரும்பொறை, தன்னை அறியாமலே, "இருக்கமாட்டார்கள்! ஒருவரும் இருக்கமாட்டார்கள்!! என்னைப் போல் ஒருவரும் இருக்கமாட்டார்கள்!!!" என்று வாய்விட்டுக் கதறுகிறான்; அதேபோது, கையில் ஏந்தியிருந்த குவளையைத், தண்ணீரோடு, தூக்கி வீசி எறிகிறான்; அப்படியே சோர்வுற்றுக் சாய்கிறான்; மீளாத் தூக்கத்தில் அமிழ்ந்துவிடுகிறான்!

இரும்பொறை உயிரை விடுகிறான்; ஆனால் இழந்த மானத்தைப் பெறுகிறான்!

ஃ ஃ ஃ

இது, புறநானூறு 74-ம் செய்யுளில் காணப்படும் கருத்தை அடிப்படையாகக் கொண்டு, தீட்டிக்காட்டப்பட்ட சொல்லோவியமாகும். இச்செய்யுள், மானத்துக்காக உயிரைவிட்ட சேரமான் கணைக்காலிரும்பொறையாலேயே இயற்றப்பட்டதாகும். இரும்பொறை அரசனாக, மானவுள்ள வீரனாகமட்டுமல்லாமல், சிறந்த புலவனாகவும் வாழ்ந்து வந்திருக்கிறான் என்பதை இச்செய்யுளிலிருந்து இனிது அறிந்து கொள்ளலாம். பண்டைத் தமிழகம், உயிரை விட்டாவது மானத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற உயரிய பண்பைப், பொன்னே போல் போற்றி வளர்த்து வந்தது என்பதற்கு மேலே தீட்டிக்காட்டப்பட்டுள்ள நிகழ்ச்சி சிறந்த எடுத்துக்காட்டாகும். 'மானத்தை விட்டாவது உயிரைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும்' என்பது வட நூலாரின் கொள்கை என்றும், 'உயிரை விட்டாவது மானத்தைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும்' என்பது தமிழ் நூலார் கொள்கை என்றும் பரிமேலழகர் திருக்குறள் உரையிலும் சுட்டிக்காட்டியுள்ளார், உயிரைவிட மானமே பெரிது என்ற கருத்தைத் திருவள்ளுவர், "மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை, பீடழிய வந்தவிடத்து", "மயிர் நீப்பின் வாழாக் கவரிமாவன்ன, ருயிர்நீப்பர் மானம் வரின்", "இளிவரின் வாழாத மான முடையார், ரொளி தொழு தேத்து முலகு" என்னும் குறள்களால் நன்கு வலியுறுத்திக் கூறியுள்ளார்.

ஃ ஃ ஃ

குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்
ஆள்அன்(று) என்று வாளில் தப்பார்
தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத்(து) இரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை இன்றி வயிற்றுத்தீத் தணியத்

தாம்இரந்(து) உண்ணும் அளவை
ஈன்ம ரோஇவ் உலகத் தானே

சேரமான் கணைக்காலிரும்பொறை சோழன் செங்கணானோடு திருப்போர்ப் புறத்துப் பொருது பற்றுக்கோட்பட்டுக் குடவாயிற் கோட்டத்துச் சிறையிற் கிடந்து தண்ணீர் தாவென்று பெறாது பெயர்த்துப் பெற்றுக் கைக்கொண்டிருந்து உண்ணான் சொல்லித் துஞ்சிய பாட்டு.

—[புறம்-74]

[குழவி - பிள்ளை ; ஊன்தடி - தசைப்பிண்டம் ; ஆள்அன்று – ஆளல்ல ; வாளில் - வாளால் ; தப்பார்- கொல்லுவதினின்றும் தவறார் ; தொடர்ப்படு - சங்கிலியால் பிணிக்கப்பட்ட ; ஞமலியின் - நாயைப்போல (பிணித்து) ; இடர்ப்படுத்து - துன்பத்தைச் செய்து ; இரீஇய - இருத்திய ; கேளல் கேளிர் - உறவினரல்லாத இறவினர், அதாவது பகைவர் ; வேளாண் - உபகாரத்தால், அதாவது தயவால் ; சிறுபதம் - சிறிய உதவி ; அதாவது தண்ணீர் ; மதுகை இன்றி – (இரந்துண்ணமாட்டோம்) என்னும் மனவலிமையின்றி ; வயிற்றுத்தீ – பசித்தீ , அளவை – தன்மையை உடையாரை ; ஈன்மரோ – பெற்றெடுப்பார்களோ ; பற்றுக் கோட்பட்டு – கட்டுக்ககப்பட்டு ; பெயர்த்துப் பெற்று – காலந்தாழ்த்தப்பெற்று ; துஞ்சிய – இறந்த அல்லது தூங்கிய.]

●●

இந்திய வரலாற்றின் தொடக்கம் எங்கே ?

"வட இந்தியாவில், சமஸ்கிருதத்தையும் அதன் வரலாற்றையும் படித்து, இந்து நாகரிகத்தின் அடிப்படைக் கூற்றைக் காண முயல்வதானது, அக்காரியத்தை மிகக் கேடானதும் மிகச் சிக்கலானதுமான இடத்தில் தொடங்குவதாகும். விந்திய மலைக்குத் தெற்கிலுள்ள இந்திய தீபகற்பமே இன்றும் சரியான இந்தியாவாக இருந்து வருகின்றது. இங்குள்ள மக்களிற் பெரும்பாலார் ஆரியர் வருமுன் தாங்கள் கொண்டிருந்த கூறுகளையும், மொழிகளையும், சமுதாய ஏற்பாடுகளையுமே இன்றும் தெளிவாகக் கொண்டிருந்து வருகிறார்கள். இங்கேகூட, வரலாற்றாசிரியனுக்குத் தன்னாட்டுப் பாவினின்றும் அயல்நாட்டு ஊடையை எளிதாய்ப் பிரித்தெடுக்க இயலாதவாறு, ஆரியம் மிக நன்றாய் வேரூன்றியுளது. ஆனால், எங்கேனும் ஓரிடத்தில் அதை வெற்றிபெறப் பிரித்தெடுக்க முடியுமானால் அது தெற்கில்தான். எவ்வளவு தெற்கே போகிறோமோ அவ்வளவு பிரித்தெடுக்க வசதி அதிகரிக்கும்."

என்று, பேராசிரியர் பி சுந்தரம்பிள்ளை அவர்களின் கருத்தை மேற்கோள் காட்டிச், சிறந்த வரலாற்றாசிரியரான வின்சென்ட் ஸ்மித்,

"அப்படியாயின், கலைமுறைப்பட்ட இந்திய வரலாற்றாசிரியன் தனது படிப்பை இதுவரை மிகவும் சிறந்ததென்று பின்பற்றின முறைப்படி கங்கைச் சமவெளியினின்றும், தொடங்காமல், கிருஷ்ணா காவிரி, வைகையாற்றுச் சமவெளிகளினின்றும் தொடங்கவேண்டும்"

என்று, அவர் தாம் எழுதிய "இந்தியாவின் முந்திய வரலாறு" என்ற நூலின் முகவுரையில் அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளார்.

இந்தியாவின் வரலாறு தொடங்கப் பெறவேண்டிய இடம் கங்கைக்கரையல்ல, கிருஷ்ணா காவிரி வைகையாற்றங்கரைகளே என்பது வின்சென்ட் ஸ்மித்தின் தெளிந்த முடிபாகும்.

விஞவும் விளக்கமும்

"பரணன்"

பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்கள் ஆரம்பிக்கப்போகும் போராட்டத்தில் திராவிட முன்னேற்றக்கழகம் பங்கேற்று ஒத்துழைக்குமா?

இப்படிப்பட்ட ஐயவினு, ஆங்காங்குள்ள சிலரின் உள்ளத்தில், இதுநாளில் எழும்புகிறது.

திராவிடக் கழகம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய இரண்டும், தனித்தனிக் கழகங்களாக இயங்கிவரும் நிலையைப் பெற்றிருக்கின்றன என்பதைச், சென்ற ஐந்தாண்டுகால அரசியல் வரலாற்றை நன்கு அறிபவர்கள் உணர்வார்கள். இரண்டு கழகங்களும், திராவிடநாடு திராவிடர்க்காகவேண்டும் என்ற அரசியல் கொள்கையிலும், பொருளாதார ஏற்றத்தாழ்வு ஒழியவேண்டும் என்ற பொருளியல் கொள்கையிலும், சமுதாய பேதங்கள் அறவே நீங்கவேண்டும் என்ற சமூகவியல் கொள்கையிலும் ஒன்றிய கருத்துடையன என்றாலும், அமைப்பு முறை—சட்டதிட்டங்கள்—செயலாற்றும் நெறி—முடிவுகள் எடுத்தல்—திட்டங்கள் தீட்டுதல்—கிளர்ச்சிகள் நடத்துதல்—போராட்டங்கள் புரிதல் போன்றவைகளில் இரண்டும் தனித்தனி போக்குடையன என்பதைத் தெளிவறிவுடையோர் நன்கு உணர்வார்கள்.

நாட்டிலுள்ள ஒவ்வொரு அரசியல் கட்சியும், மற்றக் கட்சிகளின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் எதிர்பார்க்காமலேயே, தத்தம் கட்சியின் வலிமையையும், அதற்குப் பொதுமக்கள் தரும் ஆதரவையும் நம்பித்தான் போராட்டங்கள், கிளர்ச்சிகள் போன்ற நடவடிக்கைகளில் இறங்குகின்றன. ஒரு குறிப்பிட்ட பிரச்சினையில் ஒத்த கருத்துடைய பல கட்சிகள் சமமதிப்பில்—நிலையில் ஒன்றுகூடி, ஒன்றுசேர்ந்து திட்டங்கள் தீட்டி, ஒன்ருக நின்று போராடி, அந்தக் குறிப்பிட்ட பிரச்சினையில் வெற்றிகாணும்வரையில் ஒன்ருக நின்று ஒத்துழைப்புக் கொடுத்துக்கொள்வது என்பது வேறு. ஆனல் ஒரு கட்சி தானே திட்டம் தீட்டித், தானே பொறுப்பேற்றுத், தானே போராட முற்படும்போது, பிற கட்சிகளின் முழு ஒத்துழைப்பு கிடைக்கும் என்று அந்தக்கட்சியும் எதிர்பார்ப்பதில்லை; பிற கட்சிகளும் விழுந்தோடிப் போய்ப் போராட்டம் நடத்தும் கட்சிக்கு முழு ஒத்துழைப்பையும் தந்துவிடுவதில்லை. ஆனல் பெருந்தன்மையைக் காப்பாற்றிக் கொள்ள எண்ணும் கட்சிகள், போராட்டம் நடத்தும் கட்சிக்குக் குறுக்கே போய் நிற்காமல், தத்தம் கடமைகளைத் தமக்கே உரிய வேறு வழிகளில் செய்துகொண்டுபோக எண்ணும். இதனை அரசியல் இயல்பாகவும், அரசியல் நாகரிகமாகவும் கொள்வர் அரசியல் சீர் வாய்ந்தோர். ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும் அதனதற்கென்று தனித்தனி வேலைகளும்-போராட்டங்களும் இருக்கின்றன; அவை அதனதன் போராட்டங்களிலேதாம் அக்கரை செலுத்தும் என்னும் கருத்துப்பட பெரியார் ராமசாமி அவர்கள் ஆறுதிங்கள்களுக்கு முன்னல் "விடுதலை" இதழில் எழுதியுள்ளார்கள் என்பது இங்கு நோக்கத்தக்கது.

மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் நின்றுதான், திராவிடக் கழகம் திராவிட முன்னேற்றக் கழகத்தை நோக்குகிறது. திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கிய கல்வித்திட்ட எதிர்ப்பு மறியல் போராட்டம், இரயில் நிறுத்தப் போராட்டம், டால்மியாபுரப் பெயர் மாற்றப் போராட்டம் ஆகிய மூன்று போராட்டங்களிலும் பங்கேற்று ஒத்துழைப்பு தரவேண்டியது அவசியமில்லை என்றுதான் திராவிடக் கழகத் தலைவர் பெரியார் இராமசாமி கருதினர்; திராவிட முன்னேற்றக் கழகமும் திராவிடக் கழகத்தின் ஆதரவு மும்முனைப் போராட்டங்களுக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கவுமில்லை. மேலும், பெரியார் இராமசாமி மும்முனைப் போராட்டங்களுக்கு ஆதரவு தருவதை அவசியம் என்று கருதவில்லை என்பது மட்டு

மல்ல, அவற்றைக் கண்டிக்கச்செய்வது தம் கழகத்தின் அரசியல் நேர்மை என்றும் கருதினர். திராவிட முன்னேற்றக் கழகத்தின் போராட்டத்திற்கு, ஒத்துழைப்பு தரவேண்டியது திராவிடக் கழகத்துக்கு அவசியப்பட்ட தொன்று அல்ல என்ற நிலை நீடிக்கும்போது, திராவிட முன்னேற்றக் கழகம் திராவிடக் கழகப் போராட்டத்துக்கு ஒத்துழைப்பு தருமா என்றுமட்டும் கேட்கத் துணிபவர்களின் அறிவைப்பற்றி என்னென்று கூறுவது? நியாயம் என்பது இருசாரார்க்கும் பொதுதானே? திராவிட முன்னேற்றக் கழகத்தாரிடத்தில் கேள்வி கேட்கும் நண்பர்கள் எவ்வளவு நியாயம் எதிர்பார்க்கிறார்களோ, அதே அளவு நியாயத்தைத் திராவிடக் கழகத் தலைவர் பெரியாரிடத்திலும் எதிர்பார்க்க வேண்டாமா? ஏனோ மறந்துவிடுகிறார்கள் தெரியவில்லை!

முன்பு இந்தி அழிப்புப்போராட்டம் 1952-ல் நடக்கும்போது, திராவிடக் கழகத்தோடு திராவிட முன்னேற்றக் கழகம் ஒத்துழைக்கவில்லையா என்று சிலர்க்குக் கேட்கத் தோன்றும். இந்தி அழிப்புப் போராட்டத்தை இரண்டு கழகங்களும் ஒரே நாளில் நடத்தின என்பதைத் தவிர, வேறு எந்தவித ஒத்துழைப்பும் நடைபெறவில்லை; இரண்டு கழகங்களும் தனித் தனியாகத்தான் அந்தப் போராட்டத்தை ஊர் தோறும் நடத்தின. திராவிட முன்னேற்றக் கழகம் உருவானதற்குப் பிறகு பெரியார் துவக்கி நடத்திய பல போராட்டங்களிலே, இந்தி அழிப்புப் போராட்டம் ஒன்றை மட்டும் ஏற்றுக்கொண்டு, அதேநாளில், ஆனால் தனியாக அந்தப் போராட்டத்தை நடத்திற்று. அப்பொழுதும் இணைந்து போராட்டத்தை நடத்தக்கூடாது என்ற எண்ணத்தையும், தீர்மானத்தையும் வைத்திருந்தவர்கள் திராவிடக்கழகத்தாரேயன்றி, திராவிட முன்னேற்றக்கழகத்தார் அல்லர். அத்தகைய இந்தி அழிப்புப் போராட்டம் அவசியம் என்று கருதிய காரணத்தாலும், அதற்கு முன்பு நிறைவேற்றிய கோவில்பட்டி மாநாட்டுத் தீர்மானம் துணைசெய்த காரணத்காலும், திராவிடக் கழகம் திராவிட முன்னேற்றக் கழகத்தை மதித்து அழிக்காவிட்டாலும், இந்தி அழிப்பின் ஆற்றலை வடநாடு நன்கு உணரவேண்டும் என்ற நல்லெண்ணம் இருந்த காரணத்தாலும், திராவிட முன்னேற்றக் கழகம் திராவிடக் கழகத்துக்கு ஒத்துழைப்பு தருகிறது என்ற நிலையிலில்லாமல், திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆற்றலையும் வடநாடு அதே நாளில் உணரட்டும் என்ற காரணத்தினாலும், பெரியார் குறிப்பிட்ட 1952 ஆகஸ்டு முதல் நாளை, அந்த அளவுக்கு மட்டுமே, திராவிட முன்னேற்றக் கழகம் பயன்படுத்திக்கொள்ள முன்வந்தது. இந்தி அழிப்புப் போராட்டத்தை அந்தச் சூழ்நிலையில் அவசியம் என்று கருதின காரணத்தால், அதே நாளில், திராவிட முன்னேற்றக் கழகம் தனியாக அந்தப் போராட்டத்தை நடத்திற்று. அதுபோலவே பெரியார் துவக்கும் போராட்டங்களின் குறிக்கோளும், முறையும், வகையும் செயலாற்றும் நெறியும் சரியானவைதாமா, அவசியமுடையனதாமா என்பதை முன்னேற்றக்கழகம் ஒவ்வொரு தடவையும் சிந்திக்கவேண்டியது அவசியமாகும் என்பதைக் கேள்வி கேட்கும் தோழர்கள் மறந்துவிடமாட்டார்கள் என்று கருதுகிறோம்.

அண்மையில் ஈரோட்டில் நடைபெற்ற கல்வித்திட்ட எதிர்ப்பு மாநாட்டில், பெரியார் இராமசாமி பேசுகையில், கல்வித்திட்ட எதிர்ப்பு பற்றிய சர்வகட்சி மாநாடு ஒன்றைக் கூட்டத் தாம் எண்ணியிருப்பதாகவும், கல்வித் திட்ட எதிர்ப்பை எவ்வழியில் நடத்துவது என்பதைப் பற்றி அந்த மாநாடு முடிவுசெய்யும் என்றும் குறிப்பிட்டதாகச் செய்தித்தாள்களில் செய்தி வெளிவந்தது. அந்தச் செய்தியைக் கண்ணுற்ற அறிஞர் அண்ணா அவர்கள், அப்படிச் சர்வகட்சி மாநாடு ஒன்று கூட்டப் பெறுமேயானால், திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும், அது கூடப்போகும் சர்வ கட்சிகளில் ஒன்று என்ற முறையில், அழைப்பு கிடைக்கப்பெறுமேயானால், திராவிட முன்னேற்றக் கழகமும் அந்த மாநாட்டில் கலந்துகொள்ள முயலும் என்று பொதுக்கூட்டங்களிலே கூறினார்கள். அண்மையில், 7-3-54-ம் நாள் திருச்சியில் கூடிய தி. மு. க. பொதுக்குழுக் கூட்டமும், ஆச்சாரியார் கல்வித்திட்ட ஒழிப்புப்பற்றி முற்போக்குக் கட்சிகள் எடுக்கும் நடவடிக்கைகளில், தேவைப்படும்போது, கலந்துகொள்ள, பொதுச்செயலாளருக்குத் தனியுரிமையளித்துத், தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

திராவிடக் கழகத் தலைவர் பெரியார் இராமசாமி, திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு உரியமுறையில் அழைப்பு விடுப்பாரேயானால்,

அவர் கூட்டப்போகும் சர்வகட்சிக் கூட்டத்தில் கலந்துகொள்ள நாம் முற்படுவோம் என்ற கருத்தை அறிஞர் அண்ணு அவர்கள் தெள்ளத் தெளிய விளக்கிக் காட்டியுள்ளார்கள். அறிஞர் அண்ணு அவர்கள், அரசியல் உலகில் தாம் ஒரு தனி மனிதனுக நடமாடவில்லை என்றும், தாம் தாம் வளர்ந்துள்ள ஒரு கழகத்தின் பிரதிநிதியாகவே நடமாடுகிறேன் என்றும், எந்த ஒரு அரசியல் கட்சியும் ஆரம்பிக்கும் போராட்டத்தில், தாமாகவே ஓடிக் கலந்துகொள்வதற்குத் தாம் ஒரு 'பண்டாரமோ' அல்லது 'பக்கிரியோ' அல்ல வென்றும், தாம் ஒரு கழகத்தைப் பொதுக்குழுக் கட்டளைக்கேற்பக் கட்டிக்காப்பவன் என்றும் தெளிவுபடக் கூறியுள்ளார்.

ஆனுல், இன்றைய நிலையில், பெரியார் அவர்களின் பேச்சையும், எழுத்தையும் உற்றுக் கவனித்தால், கல்வித் திட்டத்தை எதிர்க்க அவர் சர்வகட்சி மாநாடு ஒன்று கூட்டப்போவதாகவோ, கூட்டப்படும் அந்த மாநாட்டில் சர்வ கட்சிகளின் ஆய்வுரையின் பேரில் திட்டம் தீட்டப்போவதாகவோ தெரியவில்லை. சர்வ கட்சி மாநாட்டைக் கூட்டுவதற்கு முன்பே—சர்வகட்சிகளின் ஆய்வுரைகளைக் கேட்கவேண்டிய அவசியமில்லாத நிலையிலேயே, தாம் திட்டம் தீட்டித் தம் மனதில்வைத்திருப்பதாகவும், அத்திட்டத்தின்படிதான் போராட்டம் நடைபெறப்போவதாகவும், போராட்டம் துவக்கப் படும்போதுதான் அத்திட்டத்தை வெளியிட விரும்புவதாகவும், அந்தப் போராட்டத்தில் கலந்துகொள்வோர் இப்பொழுதே 'தயார்' என்று எழுதிக்கொடுத்துவிடவேண்டும் என்றும் பெரியார் அவர்கள் எழுதியும் பேசியும் வருகிருர்கள். பெரியார் அவர்கள் தம்முடைய திட்டத்தையே முடிந்த முடிவாக நினைத்துக் கொண்டு, அதற்கான படை வரிசை திரட்டவும், அதற்கான களம் அமைக்கவும் முற்பட்டு விட்டாரென்ருல், சர்வகட்சி மாநாட்டின் முடிவுக்காகவோ அல்லது சர்வ கட்சிகளின் ஆய்வுரைகளுக்காகவோ அவர் காத்திருக்க வில்லை என்பது வெளிப்படையாகிறது. பெரியார் அவர்கள் ஆரம்பிக்கப்போகும் போராட்டம், திராவிடக் கழகத் தலைவர் என்ற முறையில் தாமே தீட்டியதொரு திட்டத்தை ஒட்டியதாக இருக்குமேயொழிய, சர்வ கட்சிகளின் முடிவை ஒட்டியதாக இருக்காது என்று தெரியவருகிறது. பெரியாரின திட்டத்தைக் கண்ணை மூடிக்கொண்டு ஆதரிக்கும் கட்சிக்குத் தான் சர்வகட்சி மாநாட்டிலே இடம் உண்டு. அதனைப் பற்றி விவாதிப்பதற்கோ, திருத்தஞ் சொல்வதற்கோ, மாற்றஞ் சொல்வதற்கோ எந்தக் கட்சிக்கும் இடமில்லை என்ற முறையில் மாநாடு கூடுமேயானுல், அது "சர்வகட்சி மாநாடு" என்ற பெயரின் பண்பைப் பெறுவதாகாமற்போகும்.

பெரியார், அவரே முன்பு கூறியபடி, சர்வ கட்சி மாநாட்டைக் கூட்டிச், சர்வ கட்சிகளின் ஆய்வுரைகளைக் கேட்டுப் போராட்டத்திட்டம் வகுக்க ஒருப்படாமல், போராட்டத்திட்டம் இப்பொழுதே வகுத்துவிட்டாரென்ருல், அது "திராவிடக்கழகப் போராட்டம்" என்று பெயர் பெறவேண்டுமென்று அவர் கருதுகிருரேயன்றி "சர்வகட்சிப் போராட்டம்" என்ற முறையில் அதை நடத்த அவர் விரும்பவில்லை யென்று தெரிகிறது.

பெரியார் ஆரம்பிக்கப்போகும் போராட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் பங்குகொள்ளுமா—பங்கு கொள்ளவேண்டாமா என்று கேட்கும் தோழர்கள் நாம் சுட்டிக்காட்டியுள்ள அரசியல் நாகரிகக் கோட்பாடுகளை உணர்ந்து பார்க்கவேண்டும். பெரியார் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கும்போது, திராவிட முன்னேற்றக் கழகம் வறிதே, வெளியே நின்று வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருக்குமா என்று சிலர்க்குக் கேட்கத் தோன்றும். திராவிட முன்னேற்றக் கழகம் போராட்டங்கள் நடத்திக் கொண்டிருந்தபோது, திராவிடக் கழகம் அவற்றில் பங்கு ஏற்காமல், வெளியே நின்று தனக்குரிய கடமைகளைச் செய்து வந்தது எப்படி அரசியல்பண்பாகக் கொள்ளப் பட்டதோ, அதே அரசியல் பண்பாகத்தான், திராவிட முன்னேற்றக் கழகம், பெரியாரின் போராட்டக் காலத்தில் தனியே நின்று தனக்குரிய கடமைகளைத் தான் செய்துகொண்டிருக்க நேரிட்டாலும் கொள்ளவேண்டும்.

பெரியாரின் போராட்டத்தில் கலந்து கொள்ளவில்லையா என்று, தெருவிலே சாதாரணமாக அலைந்துகொண்டிருக்கிற சுப்பனையும், குப்பனையும் கேட்காமல், அறிஞர் அண்ணுவைக் கேட்கப்பலரும் முற்படுவதற்குக் காரணம், அவர் சாதாரண ஆளாக இல்லாமல், ஒரு கழகத்தின் பொறுப்பு வாய்ந்த பொதுச்செயலாளராக இருப்பதுதான். திராவிட முன்னேற்றக் கழகம் பெரியாரின் போராட்டத்தில் கலந்து

க்கொள்ளுமா என்று கேட்கும் தோழர்கள், அப்படிக் கேட்பதற்கு முன்னால், பெரியாரே! தி. மு. கழகத்திற்கு அழைப்பு அனுப்புவீரா? அதனோடு கலந்துபேசித் திட்டம் வகுப்பீரா? அந்தத் திட்டத்தின்படி நடப்பீரா! என்று பெரியார் அவர்களிடத்தில் கேட்டு விளக்கம் பெற்றுக்கொண்டு, அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்திடம் வந்து கேட்பார்களேயானால், அதில் அரசியல் நாகரிகமும், நேர்மையும், தெளிவும் உண்டு எனக் கூறலாம்.

பெரியார் ஆரம்பிக்கப்போவதாகக் கூறப்படும் போராட்டத்தில் தி. மு. கழகம் கலந்துகொள்வது எதைப் பொறுத்திருக்கிறது என்றால், பெரியார் தி. மு. கழகத்தின் உதவியை வெளிப்படையாக மதித்து அதற்கு அவர் அழைப்பு விடுப்பதைப் பொறுத்தும், அழைப்பு விடுத்துக் கூடிக் கலந்து திட்டம் தீட்டுவதைப் பொறுத்துந்தான் இருக்கிறது.

மேலும் பெரியார் அவர்கள் தாம் ஆரம்பிக்கப் போகும் போராட்டம் எப்படியிருக்கும் என்பதைச் சிலபல குறிப்புகளால், ஆங்காங்கு நடைபெறும் பொதுக்கூட்டங்களில் விளக்கி வருகிறார். அவரது பேச்சுக்களை உற்றுக் கவனித்தால், ஒவ்வொருவரும் கத்தியை வைத்துக் கொள்வது, அப்படி வைத்துக்கொள்வது தற்காப்புக்காகத்தான் என்று இதுவரையில் கூறிக் கொண்டிருந்த முறையை மாற்றி இனிப் பார்ப்பானைக் குத்துவதற்கென்று வைத்துக்கொள்ளுவது, பார்ப்பானின் உச்சிக்குடுமியை நறுக்குவது, பார்ப்பானின் பூணூலை அறுப்பது, அக்ரகாரத்துக்குத் தீவைத்து அதனைக் கொளுத்துவது, அதற்காகப் பெட்ரோலைச் சேகரித்து வைத்துக்கொள்ளுவது, பார்ப்பானை அடித்துத் துரத்துவது போன்றவைகள் போராட்ட முறைகளாக இருக்கும் என்று தெரியவருகிறது. இவைதாம் பெரியாரின் போராட்ட முறைகள் என்றால், திராவிட முன்னேற்றக் கழகம் அந்தப் போராட்டத்தில் அறவே கலக்காது இப்படிப்பட்ட பலாத்காரச் செயல்களில் திராவிட முன்னேற்றக்கழகம் என்றுமே நம்பிக்கைவைத்தது கிடையாது, இன்னும் அந்தப் பலாத்கார நம்பிக்கையைப் பெறவில்லை. இரண்டு ஆண்டுக் காலத்திற்கு முன்பு, பெரும்பாலும் பார்ப்பனர்களே அங்கம் பெற்றிருக்கும் சென்னை லட்சுமிபுரம் யுவர் சங்கத்தின் கூட்டம் ஒன்றில், தோழர் கே. எஸ். இராமசாஸ்திரிகள் அவர்கள் தலைமையில், பெரியார் அவர்கள் பேசியுள்ள பேச்சு மேற்கண்ட கருத்தை உறுதிப்படுத்துவதாகும். தனிப்பட்ட பார்ப்பனர்கள் எவரிடமும் தமக்கு வெறுப்பில்லை என்றும், தமது குடும்பத்திற்கு எவ்வளவோ பார்ப்பனர்கள் நண்பர்களாக இருந்துவருகிறார்கள் என்றும், பார்ப்பனீயத்தைத்தான் தாம் வெறுப்பதாகவும் பெரியார் இராமசாமி அப்பேச்சில் குறிப்பிட்டுள்ளார். பெரியாரின் போராட்டம் கத்தியால் குத்துவது, உச்சிக் குடுமியைக் கத்தரிப்பது, பூணூலை அறுப்பது, அக்ரகாரத்துக்குத் தீவைப்பது போன்ற திட்டங்களைக் கொண்டதாக இருந்து, அதில் திராவிட முன்னேற்றக் கழகம் அறவே கலந்து கொள்ளவில்லையென்றால், அதுகுறித்து யாரும் வியப்படையத் தேவையில்லை. திராவிட முன்னேற்றக்கழகம் அத்தகைய பலாத்காரமுறைகளை ஏற்றுக்கொள்ளவில்லை என்று பொருள்.

அறிஞர் அண்ணா அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளதைப்போல, தி. மு. கழகம் போராட்டத்தைத் தேடி அலையாது; சூழ்நிலை உருவாக்கித்தரும் போராட்டத்தினின்றும் தப்பி ஓடாது.

ஆரியக் கொள்கைகளுக்கு அடிமைப்பட்டு, மூடநம்பிக்கை குருட்டுப்பழக்கவழக்கங்களுக்கு இரையாகிப், பூணூல் அணிந்து, திருநீறு அல்லது திருநாமம் அல்லது திருச்சந்தனம் அல்லது திருக்குங்குமம் பூசிச் சமுதாய முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டைகளாக நிற்கும் வைதீகச் செட்டியார்கள், முதலியார்கள், நாய்க்கர்கள், படையாட்சிகள், கள்ளர், மறவர், அகம்படியர்கள், நாடார்கள், கோனார்கள், பள்ளர்கள், பறையர்கள் ஆகியோரைத் திருத்திப் பகுத்தறிவு நெறிக்குக் கொண்டுவர திராவிட முன்னேற்றக் கழகம், எவ்வளவு ஆர்வத்தோடும் ஆற்றலோடும் பாடுபட்டு வருகிறதோ, அதே அளவு ஆர்வத்தோடும் வேண்டுமானால் சற்று அதிக ஆற்றலோடும் பாடுபட்டுத், திராவிடத்திலுள்ள அய்யர்—அய்யங்கார்கள்—சாஸ்திரி—சர்மாக்களையெல்லாம் திருத்திப் பகுத்தறிவு நெறிக்கு அழைத்துவரவே கழகம் விரும்புகிறது. அது காரணப்பற்றித்தான் பார்ப்பனர்களாய்ப் பிறந்துவிட்ட சிலர், திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டு, தாம் திராவிடத்திற்குரியவர்—பகுத்

உதயபுரி ரோஜா

எஸ். எஸ். தென்னரசு

அவள் வானத்து முழு நிலவு! வைத்த கண்ணை வாங்கவிடா வையகத்துப் பேரழகி! மணிமகுடதாரிகளையும் மயக்கத்திலாழ்த்திய ராஜஸ்தானத்து அழகு ரோஜா! கிருஷ்ண குமாரி—அதுதான் அந்தச் சித்திரப்பாவையின் திருநாமம்!

அவள் 'புருவம் நெரியாதோ புன்னகை புரியாளோ' என ஏங்கி, ஏங்கி இதயமொடிந்த ஏவலர்கள் மத்தியபதிமண்டலத்தில் ஏராளம். 'அவள் புத்தம்புதிய மலர், அவள் அழகு பிரமச்சாரியத்திற்கு ஓர் அறைகூவல்' என நங்கை முகம் பாரேன் என்று கூறிடும் முனிவர்களும், நார்புசோர்ந்த நரைகிழவர்களும் பேசினார்கள்—பெருமூச்சு விட்டார்கள்.

"கிருஷ்ணகுமாரின் கைபிடித்து மெய்யுறவு கொள்ளப்போகிறவன் கீழேழு, மேலேழு உலகத்திலும் புண்ணியம் செய்தவனாகத்தானிருப்பான். ஒப்பற்ற ஓவியப்பாவையை ஏற்றுக்கொள்ளும் பாக்கியம் சாமான்யனுக்கா கிடைக்கும்"—அந்தப்புரவட்டாரத்து அணங்குகளும் அவர்தம் சுற்றத்தாரும் இப்படிப் பேசிக்கொண்டார்கள்.

ஆனால் மகாராணு பீமசிம்மன்—கிருஷ்ண குமாரியின் தந்தை-மத்தியபதி மண்டலத்தின் கொற்றவன் சிந்திக்கிறான், "என் செய்வது, ஏது புரிவது, இளவரசர்களிடையே போட்டியையும் பொறாமையையும் கிளறிவிட்டுவிட்டதே கிருஷ்ண குமாரியின் திருமணம்" என்று. அதன்முடிவு அழகி கிருஷ்ணகுமாரி, அமைதி எனும் பலிபீடத்தில் ஏற்றப்பட்டு பொறாமைக்காரங்களால் அவள் வாழ்வு அணைக்கப்பட்டுவிட்டது. அந்த வடிவழகியின் மறைவு வரலாற்றிலே ஒரு சோகக் கறையைப் பூசிவிட்டது. கடந்துபோன நிகழ்ச்சிக்கோர்வையின் முற்பகுதியைப் புரட்டிப்பார்த்தால் வாழாமல் மடிந்த அந்த வனிதையை—முகராமல் கருகிய அந்த முல்லை மலரைக் காண்பீர்கள்.

ஃ ஃ ஃ

1805—1807! இடையிலே ஓடிய இந்த மூன்று ஆண்டுகளுக்குள்தான் மத்தியபதி மண்டலத்து மன்னர் பலர் மதியிழந்தனர். கிருஷ்ணகுமாரிக்கு மாலை சூட்டும் மணவாளன் யார் என்று பார்க்க மார்தட்டிப் போர்புரிந்ததும் இந்த மூன்றாண்டுகளுக்குள்தான்.

ஃ ஃ ஃ

மார்வாரம் மீவார் மண்டலத்தில் ஒரு குறுநாடு. அந்த நாட்டு பார்த்தீபன் கிருஷ்ணகுமாரியை தனக்கு மணம்முடித்துத் தரும்படி உதயபுரி ராணுவுக்கு ஓலை அனுப்பியிருந்தான். ஓலை கண்ட ராணு அருமை மகள் கிருஷ்ண

தறிவு நெறியினர் என்ற உணர்வோடு தி. மு. கழகத்தில் உறுப்பினராகிவருகின்றனர். இந்த எண்ணிக்கை இப்பொழுது மிக மிகக் குறைவு என்றாலும், நாளடைவில் பெருகும் என்ற உறுதிப்பாடு கழகத்திற்கு உண்டு. எனவேதான், பார்ப்பனர்களை விரட்டி அடிக்கும் பலாத்கார முயற்சியில், தி. மு. கழகம் இறங்கவில்லை; அவர்கள் உள்ளத்தில் ஊறிக்கிடக்கும் பார்ப்பனீயத்தை அகற்றவே பாடுபட்டு வருகிறது.

தி. மு. கழகம் தன் கொள்கைக்கும் தன் குறிக்கோளுக்கும், தன் உரிமைக்கும், தன் மதிப்புக்கும் ஒத்துவரும் பிறரிடத்து மட்டுமே தன் நேசக்கரத்தை நீட்டும் என்பதை மேற்கண்டவாறு வினவுவோர் விளங்கிக்கொள்ள வேண்டும்.

குமாரி மார்வார் நாட்டிற்கு மகாராணியாகும் வாய்ப்புக் கிடைத்துவிட்டது என்று பேரானந்த மடைந்தான். இதுகாறும் தான் இட்டு வந்த கட்டளையை மார்வார் நாட்டு மன்னவன் தான் மதிக்காதிருந்தான், இனி அவனும் படிந்து பேசுவான் என்ற அதிகார மோகம், மார்வாரத்துக் காவலனுக்கு கிருஷ்ணகுமாரியை கொடுக்கும்படி ராணாவின் இதயத்தைத் தூண்டியது. திருமண ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்றன. ஆனால் உதயபுரி ராணாவின் உள்ளத்தில் ஒளிவிட்டுக்கொண்டிருந்த அந்த ஆசை ஜோதி நிறைவேறாமல் அணைந்துவிடு மென்பதை அவனெப்படி அறிவான்? மருமகனாக வரவிருந்த மார்வார் மன்னன் மணவிழா நாளுக்கு முன்பாகவே மாரடைப்பால் மீளா நித்திரையில் ஆழ்ந்துவிட்டான்.

வரவிருந்த மாப்பிள்ளை மரணமடைந்தது மட்டுமல்ல ராணாவின் வருத்தம், உதயபுரியைச் சூழ்ந்துள்ள குறுநில மன்னர்களின் கேலிச் சதுரங்கத்திற்குத் தான் ஒரு ஆட்டக்காயாக ஆகிவிட நேர்ந்துவிட்டதே என்ற கவலைதான் அவர் நெஞ்சை 'சுளீர், சுளீர்' என்று குத்திக் கொண்டிருந்தது. "வைதீகத்திற்கு முரணாக நடப்பதா, வைத்த திருமணநாளை மாற்றுவதா, குருடனாக இருந்தாலும் சரி, குரூபியாக இருந்தாலும் சரி யாருக்காவது எப்படியும் கிருஷ்ண குமாரியை அதே நாளில் திருமணம் முடித்து விடவேண்டும்" என்று முடிவுகட்டிவிட்டான் ராணா.

ஜெய்ப்பூர் வேந்தன் ஜெகத்சிம்மனுக்கு இச் செய்தி எட்டியது. நல்ல தருணம் இதை நாசமாக்கிவிடக்கூடாதென்று மறுநாளே உதயபுரி ராணாவுக்கு செய்தியைச் சொல்லியனுப்பினான். ஜகத்சிம்மனின் முடங்கல் ராணா பீமசிம்மனின் இதயத்தில் அமுதம் பாய்ச்சியது. குறித்த நாளில் திருமணம் நடத்திக்கொள்ள குணமுள்ள இளவரசன் முன்வந்துள்ளான், குவலயத்து மன்னர்களின் பழிச்சொல் இனி வராது' என்ற மகிழ்ச்சிதான் ராணாவின் உச்சியைக் குளிரவைத்தது.

அடுத்த கிழமை திருமணம் உதயபுரி ராணாவின் எல்லைக்குட்பட்ட சிற்றூர், பேரூர்களிலெல்லாம் மகர தோரணங்கள் கட்டப்பட்டுவிட்டன. உதயபுரிக் கோட்டை, உலகமெச்சும் ரோமாபுரி அரண்மனையை நெஞ்சுக்கு இழுத்துவரக்கூடியதாக ஜோடனைகள் செய்யப்பட்டிருந்தன.

"திருமண விழாவன்று என்னென்ன வேடிக்கைகள் வைக்கலாம்? மணமகன் ஜகத் சிம்மனுக்கு எதிலே அதிக விருப்பம்? சேவற்கட்டு வைக்கலாமா, செம்மறிகடா சண்டை வைக்கலாமா?" இப்படிப்பட்ட குழப்பத்தில் ராணா சிக்கித் திணறிக்கொண்டிருந்தான் இரவு நேரம் நாழிகை ஓடிக்கொண்டிருந்தது, ராணாவின் சிந்தனை ஓயவில்லை. மணி பன்னிரண்டுக்கு மேலாகிவிட்டது.

"டடக், டடக், டடக!"—இப்படி ஒரு ஒலி அந்த நேரத்தில் இருளைக் கிழித்துக்கொண்டு வந்து ராணாவின் செவிகளில் முட்டியது.

"குதிரையின் குளம்படியாக அல்லவா இருக்கிறது! ஆமாம்; இருக்கலாம், இருக்கலாம். ஜெய்ப்பூரிலிருந்து ஏதும் அவசரச் செய்தியாக இருக்கலாம்" என்று ராணா தன்னைத்தானே சாந்திப்படுத்திக்கொண்டு தகவலை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். ஆனால் நெடுநேரமாகியும் ராணாவுக்கு தகவல் அறிவிக்கப்படவில்லை. சால்வையை போர்த்திக்கொண்டு புருவத்தை நெறித்தவண்ணம் ராணா படிக்கட்டுகளில் இறங்கினான். அப்போது உதயபுரி படைவீரர்கள் நால்வர் கருப்புடை தரித்த மார்வார் நாட்டுத் தூதுவனை அழைத்து வந்துகொண்டிருந்தார்கள். தூதுவன் கொடுத்த ஓலையை ஆவலோடு விரித்துப் பார்த்தான் ராணா.

பெருமை மிக்க ராணா பீமசிம்மரே,

வணக்கம்!

தங்கள் மகள் கிருஷ்ணகுமாரியை மார்வார் நாட்டு முன்னாள் மன்னவருக்கு மணமுடித்துத் தருவதாக வாக்களித்திருந்தீர்கள் தூர்பாக்கியவசமாக அன்னவர் இறந்தார். அவருக்குப் பதிலாக இப்போது நான் கோலேந்தி இருக்கிறேன். மன்னர் மரபினர் இதுவரை பின்பற்றி வந்த முறைப்படி கிருஷ்ணகுமாரி எனக்கே உரியவளாவாள். ஜெய்ப்பூர் மன்னனுக்குப் பெண்ணைக் கொடுக்க நீவிர் இணங்கி இருப்பது முறைகேடானது. எனவே வாக்களித்தபடி உமது பெண்ணை எனக்குக் கொடுத்து உமது மணிமுடியைக் காத்துக்கொள்க! இன்றேல்

உதயபுரி கோட்டை இருந்த இடம் தெரியாமல் புழுதிமேடாக்கப்படும்".

இப்படிக்கு,

ராஜ மானசிம்மன்.

என்று அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. உதயபுரி ராணாவுக்குப் பயத்தால் உடலெல்லாம் உதறல் கண்டுவிட்டது. தனக்கு ஒப்பாரும் மிக்காருமில்லை என்று தரணியிலே வெற்றிப்பண்பாடி வீர உலா வரும் கீர்த்தி உதயபுரிக்கே உரித்தாக இருந்த காலம் ஒன்று உண்டு. சீரும் செல்லாக்கும் 'சிரஞ்சீவி' பட்டம் பெற்றதல்லவே! காலத்திடம் அவைகளெல்லாம் எந்த மூலைக்கு? உதயபுரி இப்போது பட்டுப்போன மரம்! பல்லிழந்த கிழட்டுச் சிங்கம்!

ராணாவின் முகத்தைச் சோகம் கப்பிக்கொண்டது. மார்வார் நாட்டு மன்னன் இராஜ மானசிம்மன் கருத்துக்கு இசைத்துவிட்டதாகச் சொல்லியனுப்பிவிட்டான். அதே நேரத்தில் ஜெய்ப்பூர் வேந்தனுக்கும் நிலைமையை விளக்கி ஓலை தீட்டப்பட்டுவிட்டது.

பெரும்பெரும் களங்களையெல்லாம் கண்ட ராணா, மார்பின் வலப்புரத்தில் வேல் பாய்ந்தபோது, அதை இடக்கரத்தால் பிடுங்க எத்தனித்தபோது எட்டிநின்று குறிவைத்து அந்நியப்படை அம்பெய்தபோதும் அஞ்சாது போர் புரிந்த அந்த மாவீரன் இப்போது மலைத்துவிட்டான். மகளின் மணவிழா மாற்றாரின் சிரிப்புக்குரியதாகிவிட்டதே என்ற கவலை அவனது விருத்தாப்பிய உள்ளத்தை நைந்துத் தூளாக்கத் துவங்கியது. சாளரத்தின் வழியே ஊடுருவிக்கொண்டு வந்த விளக்கொளி மாடத்தில் உலாத்திக்கொண்டிருந்த ராணாவின் கவனத்தை தன்பக்கம் திருப்பியது. நெற்றியை சுழித்துக்கொண்டு ஒளிவரும் திக்கை நோக்கினான். கிருஷ்ணகுமாரியின் அந்தப்புரத்தில்தான் அந்த விளக்கு எரிந்துகொண்டிருப்பதைக் கண்டான்.

ஃ ஃ ஃ

ஜெய்ப்பூர் அரசவை. உதயபுரி ஊர்வசி தனக்கு உரியவளாகப்போகிறாள் என்ற உற்சாகத்தில் என்றுமில்லாத கெம்பீரத்தோடு மன்றம் புகுந்தான் வேந்தன் ஜகத்சிம்மன். அரசாங்க மரியாதைகள், ஆரணங்குகளின் நடனம் இவைகள் வழக்கம்போல் நடந்தேறின. மன்னன் சுவைத்தான் இவைகளை. இன்ப போதையில் அவன் தலை அவனை யறியாமல் சுழன்றது.

"நிறுத்துங்கள் நடனத்தை!"—இப்படி ஒரு நிமிர்ந்தகுரல் அரசவைக்கூடத்தை அஸ்திவாரத்தோடு சேர்த்து அதிரவைத்தது. அதிகாரத் தொனி கேட்டு அலறிப்போன நாட்டிய நங்கைகள் ஆட்டத்தை நிறுத்திவிட்டனர். அரசன் திகைத்துப்போய் சுற்றுமுற்றும் பார்த்தான். ஜெய்ப்பூர் அமைச்சர் வீராவேசத்தோடு மன்னனை நோக்கி விரைந்துகொண்டிருந்தார்.

"மன்னவரே, விண்ணவர் கண்டஞ்சும் வீரர் கோட்டத்தை வேதனைக்குள்ளாக்கி வேடிக்கை பார்க்கிறுர்கள்"—அமைச்சர் கர்ஜித்தார்.

"கல்யாணம் நெருங்கிவிட்டது. காரியமாற்ற வேண்டிய நீங்கள் கடுகடுப்பாகப் பேசவேண்டியதேன். ஆத்திரப்படாமல் நடந்ததைக் கூறுங்கள்"—ஜகத்சிம்மன் கேட்டான் சாவதானமாக.

"சொன்னுல் நீங்கள் சீறிப் பாய்வீர்கள். உதயபுரி ராணா நமக்குப் பெண் தரப்போவதில்லையாம்—ஓலை அனுப்பியிருக்கிறுன் அந்த ஏமாற்றுக்காரன்: மார்வார் மன்னனுக்கேத் தருவதாக வாக்களித்துவிட்டானும்."

"என்ன! பெண் தரமாட்டானு? செத்துப்போன புகழை நினைத்து நினைத்து பித்துப் பிடித்துவிட்டதுபோலிருக்கிறது. அமைச்சரே, ஆலோசனை இனி வேண்டாம். படை தயாராகட்டும். ஜெய்ப்பூர் கோபுரமேறி நானே முரசறைகிறேன்" என்று அனல்கக்கப் பேசிக்கொண்டே சிங்காதனத்தை விட்டகன்றுன்.

ஜெய்ப்பூர் படை உதயபுரியை நோக்கி ஊர்ந்தது. உதயபுரி நோக்கி ஜெய்ப்பூர் படை வருகிறதென்றுல் மருமகனை வரப்போகும் மார்வாரத்து இராஜ மானசிம்மன் கண்மூடி மௌனியாகவா இருப்பான்? அவ்வளவுதான் மார்வார் படையும் அணிவகுத்தது. மராட்டிய மாவீரன் மகடோஜி சிண்டியா மார்வார் படைக்கு துணைபுரிந்தான்.

உதயபுரியின் விளிம்பில் உக்ரமான போர்! வேல் பாய்ந்த வேழங்களின் வேதனைக் கதறல் கெற்பத்தையும் கலங்கவைத்தது. களம் சேருகி, சேறு குளமாகிவிட்டது—இரத்தத்தால்! போர் நின்றதா?—இல்லை! போகப்போக

வேகமாகத்தான் கூடிற்று. வெற்றி யாருக்கு?—கணித்துக்கூற வழியில்லை.

ஃ ஃ ஃ

உதயபுரியில், ராணாவின் மூளை குழம்பிவிட்டது. சண்டை துவங்கியதிலிருந்து ராணா சாப்பாட்டையும் துறந்துவிட்டான். ரணகளம் அவன் இதயத்தில் தோன்றித் தோன்றி மறைகிறது.

"ராணா!"

திரும்பிப் பார்த்தான் ராணா. அவனுடைய அந்தரங்கச் செயலாளன் அமீர்கான் அவசர அவசரமாக ராணாவை நோக்கி வந்துகொண்டிருந்தான்.

"அமீர்கான்!" வேதனை தோய்ந்த குரலில் ராணா.

"ராணா நிலைமை கவலைக்கிடமாகிப் போய் விட்டது. உதயபுரிக் கோட்டை உங்கள் காலத்திற்குள்ளேயே அந்நியன் கைக்குப் போகப்போகிறது—இதை விரும்புகிறீர்களா நீங்கள்?"

"அமீர்கான்!"—உரத்தகுரலில்.

"ராணா! அமீர்கான் அவசரப்புத்திக்காரனல்ல. ஆய்ந்தோய்ந்து பார்த்துத்தான் கூறுகிறேன். மார்வார் படையின் பெரும்பகுதியினர் மாண்டுவிட்டனராம்."

"அமீர்கான், போதும் விளக்கம்! போரை நிறுத்த வழிசொல்லுங்கள்!"

"ராணா நினைத்தால் இன்றே போரை நிறுத்திவிடலாம். ஆனால்!"

"ஆனால்? என்ன சொல்கிறீர்? சொல்லுங்கள் சீக்கிரம்!"

"இதோ பாருங்கள்" என்று கூறி ஒரு செய்தித் துண்டை ராணாவிடம் கொடுத்தான் அமீர்கான்.

ராணா அக்கடிதத்தைப் படித்துவிட்டு, "ஆ! அமீர்கான் இதைத் தவிர்த்து வேறு வழியில்லையா? ஐயோ நெஞ்சடைக்கிறதே! கிருஷ்ண குமாரி! கிருஷ்ணகுமாரி!" என்று கூவுகிறான் ராணா. பக்கத்தில் நின்ற அமீர்கான் ராணாவை தோளோடு அணைத்தபடி உள்ளே கூட்டிச் சென்றான்.

ஃ ஃ ஃ

போர்க்களம்! இருசாராரும் தங்கள், தங்கள் நாட்டின் எதிர்கால வாழ்வை நிர்ணயிக்கும் போராகக் கருதி உத்வேகத்தோடு போர்புரிந்தனர். முதல்நாள்வரை வெற்றியின் சாயல் ஜெய்ப்பூர் படையின் பக்கமே பதிந்திருந்தது. ஆனால் அண்டை நாட்டார் அனைவருமே வியப்புறும் வகையில் போரின் முடிவு அமைந்துவிட்டது.

ஜெய்ப்பூர் வேந்தன் ஜகத்சிம்மன் அமர்ந்திருந்த யானை, போர் முடிவுறும் கட்டத்திற்கு வந்துகொண்டிருக்கும்போது மதங்கொண்டு கட்டுக்கடங்காமல் 'தலைவிரி' கோலமாய் ஓடத் தொடங்கியது. இதனால் ஆட்டங்கண்டுபோன அம்பாரி முறிந்து சாயவே மன்னன் ஜகத்சிம்மனும் விழுந்துவிட்டான். முன் வரிசையில் நின்று முழுவேகத்தைப் பிரயோகித்து சமர் புரிந்துகொண்டிருந்த ஜெய்ப்பூர் படை இதை உணராது தங்கள் மன்னனும் ஓடிவிட்டான், யானையும் ஓடிவிட்டதென்றெண்ணி அவர்கள் புறமுதுகிட்டு ஓடத்தொடங்கினர். இந்த நல்வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டது மார்வாரம் வெற்றிவாகை எதிர்பாராது அவன் கழுத்தில் விழுந்தது.

மார்வார் படை நெஞ்சை நிமிர்த்தி 'நிகரில்லை' கீதம்பாடி உதயபுரி நோக்கிப் புறப்பட்டது. உதயபுரியின் கோட்டைச்சுவர் கண்ணுக்குத் தெரிந்ததும் வேந்தன் இராஜமானசிம்மனின் இதழ்கள் விரிந்தன. அவனது கண்கள் கோட்டையின் தலைவாசலைக் குறிவைத்தன. கோட்டையின் உச்சிமாடத்தில் ஒரு சிலர் நின்றுகொண்டிருந்தார்கள். மாபெரும் மவுன அணிவகுப்பு ஒன்று கோட்டைக்குள்ளிருந்துவந்துகொண்டிருந்தது. அணிவகுப்பின் நடுவே ஒளி வீசும் முத்து சிவிகை ஒன்று தென்பட்டது. "ஆகா! நல்ல ஏற்பாடு! கெட்டாலும் மேன் மக்கள், மேன்மக்கள்தான்! இராஜமானசிம்மன் பாக்கியசாலி, இல்லாவிட்டால் இப்பேர்ப்பட்ட வரவேற்பு எப்படிக் கிடைக்கும்?" தனக்குத்தானே நினைத் நெஞ்சம் பூரித்தான் இராஜமானசிம்மன். மகிழ்ச்சிப் பெருக்கால் அவன் முகம் மொட்டவிழ்த்து மலர்ந்தது. தனக்குப்பின்னே அணிவகுத்து வரும் படையை ஒருமுறை பெருமிதத்தோடு திரும்பிப்பார்த்தான். "நல்விருந்து! மாமன்னர் கண்களுக்கு நல்விருந்து! மார்வார அந்தஸ்தைக் குறைவாக மதித்துவிடமாட்டார் ராணா"

என்று தன்னை யறியாமலே வாய்விட்டுக் கூறிக் கொண்டு முன்பக்கம் திரும்பினான். அப்போது இரண்டு உயர்ந்த கருங்குதிரையில் வந்த வீரர்கள் இராஜமானசிம்மனின் குதிரையைத் தடுத்து நிறுத்தினார்கள்.

"யார் நீங்கள்? நான் மார்வார் மன்னன், மணவிழாவுக்காகச் செல்கிறேன்" என்றான் மார்வார் வேந்தன்.

"மன்னிக்கவேண்டுகிறோம் மன்னவரே! இளவரசி இறந்துவிட்டார்கள். அதோ வருவது அவர்களது பிணம்தான்" என்றான் அந்த வீரர்களில் ஒருவன்.

தலை சுற்றியது அவனுக்கு! தரணியே சுற்றுவதுபோல் தெரிந்தது அவன் கண்களுக்கு! இராஜ மானசிம்மன் குதிரையை விட்டுக் குதித்து ஓடிச்சென்று அவனும் அந்தப் பிரேத ஊர்வலத்தில் கலந்துகொண்டான்.

அமைதியை விரும்பிய உதயபுரி ராணா தன்னுடைய ஆலோசகன் அமீர்கானின் தூண்டுதலால்தான் கிருஷ்ணகுமாரிக்கு விஷம்கொடுத்துக் கொன்றான் என்பதுமட்டும் இராஜ மான சிம்மனின் காதுக்கு எட்டியிருந்தால், அந்த இடத்திலேயே அமீர்கானை கண்டதுண்டமாக வெட்டியிருப்பான். அவன் எப்படி அறிவான் இந்த இருட்டறை நாடகத்தை!

உதயபுரியை இருள் கவ்விற்று. குன்றென அடுக்கப்பட்டிருந்த சந்தனக் கட்டையில் கிருஷ்ணகுமாரியின் உடல் ஏற்றப்பட்டு, அமீர்கான் கையாலேயே தீவைக்கப்பட்டது. கொழுந்துவிட்டெறிந்தது அந்த நெருப்பு ஜ்வாலை! ராணா உப்பரிகையில் நின்று பிணவாடையை முகர்ந்துகொண்டிருப்பது மயானத்தில் நின்ற மார்வார் மன்னன் கண்களுக்கு நன்கு புலப்பட்டது.

●●

குகை

குகை என்ற சொல், மலைக்குகையை உணர்த்தும் ஒரு சொல்லாகப் பெரு வழக்கில் இருந்துவந்தபோதிலும், துறவிகள் வாழும் மடத்தைக் குறிக்கும் சொல்லாகவும் இடைக்காலங்களில் பயன்படுத்தப்பட்டுவந்ததாக அறியவருகின்றது. சில கல்வெட்டுகள் இதற்குச் சான்று பகர்கின்றன.

"திருமுறைத் தேவாரச் செல்வன் குகை" (Madras Epigraphist Report 10 of 1918) என்பதும், "திருத்தொண்டத் தொகையான் குகை" (M. E. R. 10 of 1918) என்பதும் மடங்களைக் குறிப்பதைக் காணலாம். குகை நமசிவாய தேசிகர், குகை ஈசுவர சாமியார் என்பவர்கள் துறவிகளாய் இருந்து, சமய நெறி பரப்பியவர்களாய் வாழ்ந்தவர்கள். அவர்களுக்கு அடைமொழியாகக் கொடுக்கப்பட்டிருக்கும் 'குகை' என்ற சொல் மடத்தை உணர்த்துவதையே கண்டுகொள்ளலாம்.

கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த மூன்றாம் குலோத்துங்கன்என்ற மன்னன் காலத்தில், 'குகையிடி கலகம்' ஒன்று நடைபெற்றதாக, அவனுக்குப் பிற்பட்ட சோழன் கல்வெட்டு ஒன்று அறிவிக்கிறது. அந்தக் 'குகையிடி கலக'த்தின்போது, பல குகைகள் அழிக்கப்பட்டன என்றும், அவற்றுள் திருத்துறைப்பூண்டியிலிருந்த குகையொன்று அதன் சொத்துக்களுடன் பாழ்படுத்தப்பட்டது என்றும் அக்கல்வெட்டு கூறுகிறது. துறவிகளின் மடத்தின்மேல் தொடுக்கப்பட்ட கலகம் இன்ன காரணம்பற்றியது என்று தெரியவில்லை. பௌத்த—சமணத் துறவிகள் வாழ்ந்த மடங்களைப் பிற சமயத்தார் அழித்த வரலாறுகளில் இந்நிகழ்ச்சியும் ஒன்றாக இருக்கக்கூடும் என்று எண்ணுவதற்கும் இடமுண்டு. சேலத்தில் 'குகை' என்ற பகுதி அப்பெயரால் அழைக்கப்படுவதற்கு, அப்பகுதியிலிருந்த மடத்தின் பெயரால் அது அழைக்கப்படுவதாக இருந்தாலும் இருக்கக்கூடும்.

பூணூலணியும் பழக்கம்

பூணூலணிதல் பார்ப்பனர்க்கே உரியது. 'நூலெனிலோ கோல் சாயும்' என்னும் செய்யுளும் 'ஊர்கெட நூலைவிடு' என்னும் பழமொழியும் இதனை வற்புறுத்தும்.

தமிழ்நாட்டு வணிகரும் ஐவகைக் கம்மியரும் பூணூல் பூண்டது, அறியாமைபற்றி ஆரிய முறையைச் சிறந்ததாகக் கருதிய பிற்காலமாகும்.

ஆரியம் தமிழ்நாட்டில் வேரூன்றிப் பார்ப்பனர்க்குத் தலைமை ஏற்பட்டபின், பல தமிழ் வகுப்பினர் தங்களுக்கு ஆரியத் தொடர்பு கூறுவதை உயர்வாகக் கருதினர். ஆரியக்குல முறைக்கும் திராவிடக்குல முறைக்கும் இயைபு இல்லாவிடினும், ஆரியரல்லாதவரெல்லாம் சூத்திர வகுப்பின்பாற்பட்டவர் என்னும் தவறான ஆரியப் பொதுக்கொள்கைப்படி, தமிழரெல்லாருக்கும் சூத்திரப் பொதுப்பட்டம் சூட்டின பிற்காலத்தில், தமிழ்நாட்டிலுள்ள வணிகர் தங்களை வைசியரென்று சொல்லிக் கொண்டால், சூத்திரப்பட்டம் நீங்குவதுடன் ஆரியக் குலத்தொடர்பும் கூறிக்கொள்ளலாமென்று, ஆரிய முறையைப் பின்பற்றி வைசியர், சிரேஷ்டி (சிரேட்டி, செட்டி) என்னும் ஆரியப் பெயர்களையும், பூணூலணியும் வழக்கத்தையும் மேற்கொண்டனர். வணிகர் செல்வம் மிகுந்தவராதலின் அவரது துணையின் இன்றியமையாமையையும், தமிழர்க்குள் பிரிவு ஏற்பட, ஏற்பட அவரது ஒற்றுமை கெட்டுத் தங்கட்குத் தமிழ்நாட்டில் ஊற்றமும், மேன்மையும் ஏற்பட வசதியாயிருப்பதையும், பார்ப்பனர் எண்ணித் தமிழக வணிகருக்குத் தாராளமாய் வைசியப் பட்டம் தந்தனர்.

ஆரியர்க்குள், பூணூலணிவது பிராமணர், க்ஷத்திரியர், வைசியர் என்னும் மேல் மூவரணத்தார்க்கும் உரியதேனும், அது ஆரியரோடு தொடர்பில்லாத தமிழர்க்குச் சிறிதும் ஏற்பதன்று. ஒவ்வொரு நாட்டிலும் மறையோர், அரசன், வணிகர், உழவர் என்னும் நாற்பாலார் உளர். அவரையெல்லாம் (சிறிது வேறுபட்ட) ஆரிய முறைப்படி முறையே பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்று கொள்ளின், இங்கிலாந்திலுள்ள கந்தர்புரி (Canterbury) அரசக் கண்காணிபாளரை (Archbishop)ப் பிராமணரென்றும், மாட்சிமைதங்கிய மன்னரை க்ஷத்திரியரென்றும், அங்குள்ள வணிகத் தொழிலாளரை வைசியரென்றும், உழவரையும் கூலிக்காரரையும் சூத்திரரென்றும் கூற வேண்டும். ஆங்கிலேயர் ஒரு கலவைக்குலத்தாரேனும், உறவு முறையில் எல்லாரும் ஒரே குலத்தார் என்பது சரித்திரமறிந்த அனைவர்க்கும் தெளிவாய்த் தெரிந்ததே. பிராமணர்கள் பிற நாடுகளிலுள்ளவர்களையும் ஆரியக்குல முறைப்படி பகுத்தாலும், பிராமணக்குலத் தன்மை மட்டும் தங்கட்கே யுரியதாகக் கொள்வர். அதோடு கூடியவரை எல்லாரையும் சூத்திரரென்று பொதுப்படச் சொல்லி, பின்பு ஒரு பயனோக்கி அரசரை க்ஷத்திரியரென்றும், வணிகரை வைசியரென்றும் முன்னுக்குப் பின் முரண்படக் கூறுவது அவர் வழக்கம்.

கம்மியர் (கம்மாளர்) நெடுங்காலமாகப் பிராமணரோடு இகல் கொண்டு வருவதனால், தாமும் பிராமணரும் சமம் என்று காட்டுவதற்காகப் பூணூலணிந்து வருகின்றனரேயன்றி வேறன்று.

தமிழ்நாட்டில் பூணூலணியும் தமிழரெல்லாம் ஏதேனும் ஓர் வணிகத் தொழிலராயும், கம்மியத் தொழிலராயுமே இருப்பர்.

தமிழரின் நாகரிகத்தையும், சரித்திரத்தையும் அறியாத தமிழர், ஆரிய நாகரிகத்தை உயர்ந்ததென மயங்கி, இக்காலத்தும் ஆரிய வழக்கத்தை மேற்கொள்வதால் உயர்வடையலாமென்று கருதுகின்றனர். சில ஆண்டுகளுக்கு முன், சிவகாசி, சாத்தூர் முதலிய சில இடங்களிலுள்ள தனித்தமிழரான நாடார் குலத்தினர், புதிதாகப் பூணூலணிந்துகொண்டதுடன், தங்களை க்ஷத்திரியரென்றும் கூறிக்கொண்டனர். நாடார் குலத்தினர் வணிக குலத்தைச் சேர்ந்தவரென்பது உலகவழக்காலும், நூல்வழக்காலும் தெளிவாயறியக்கிடக்கின்றது. வைசியர், க்ஷத்திரியர் என்னும் பெயர்கள் வடசொற்களாயிருப்பதுடன், க்ஷத்திரியர் என்னும் பெயர் நாடார் குலத்திற்கு ஏற்காததாயுமிருக்கின்றது.

நூல் என்பது புத்தகத்திற்கும் இழைக்கும் பொதுப்பெயராதலின், நூலோர் என்னும் பெயர் அறிஞரையும், பார்ப்பனரையுங் குறிக்கும்; இடம்நோக்கியறிந்துகொள்க!

—தேவநேயப் பாவாணர்.

தையற் கலை

கே. பி. சுந்தரம், G.C.T.

கை (இஸ்டெண்டிங் ஸ்லீவ்ஸ்)

படம் 1

முன்னங்கையில் மடிப்பு இல்லாமல், தோள் பக்கம் மடிப்பு உள்ள (V கட்) கையின் விளக்கமே இது.

அளவுகள்

கை நீளம்	10	அங்குலம்.
முன்னங்கை சுற்று அளவு	$5\frac{3}{4}$	,,
மார்பு சுற்று அளவு	34	,,



1-ல் இருந்து 0 வரை 12 அங்.
(கை நீளம் + 2 அங். தோள்பக்கம் மடிப்புக்காக)

2-ல் இருந்து 0 வரை 6 அங்.
($1\frac{1}{8}$ மார்பு அளவு + $1\frac{3}{4}$ அங்.)

3-ல் இருந்து 2 வரை $8\frac{1}{2}$ அங்.
($\frac{1}{4}$ மார்பு அளவு. 3, 2-க்கும் குறுக்குக் கோடு இணைக்கவும்)

4-ல் இருந்து 1 வரை $7\frac{1}{2}$ அங்.
(முன்னங்கை லூஸ் + $1\frac{3}{4}$ அங்.)

5-ல் இருந்து 0 வரை 2 ,,
(0, 3-க்கும் சாய்வு கோடு இணைக்கவும்)

6-ல் இருந்து 5 வரை 5 ,,

7-ல் இருந்து 6 வரை $\frac{1}{2}$,,

8-ல் இருந்து 5 வரை 1 அங்.

9-ல் இருந்து 2 வரை $\frac{1}{4}$,,

10-ல் இருந்து 4 வரை $6\frac{1}{2}$,,
(முன்னங்கை லூஸ் + $\frac{3}{4}$ அங்.)

A-ல் இருந்து 6 வரை $\frac{1}{4}$,,

K-ல் இருந்து 8 வரை $\frac{1}{2}$,,

10, 4, 3, 7, 8, 0, 9, 10 எண்கள் வரை கை இணைப்புகள்.

3, A, K, 0 வரை உள்ள புள்ளிகள் வைத்துள்ள கோட்டின்மீது காவர்தட்டு வெட்டி எடுக்கவும்.

1, 10 மத்தியில் உள்ள கோடுகள் வரைந்துள்ளவரை (9) வரை வெட்டி எடுத்துவிடலாம். அல்லது அப்படியே உள்பக்கம் வைத்தும் தைக்கலாம்.

திருத்தம்

சென்ற இதழில் கீழ்க்கண்டவாறு திருத்தம் செய்துகொள்க.

பின்பக்கத்தின் விளக்கம் என்ற தலைப்பின் கீழ் 4-ல் இருந்து என்று தொடங்கும் வரியில் $2\frac{1}{4}$ அங். என்பதை $2\frac{1}{2}$ அங். என்று திருத்திக் கொள்க.

முன்பக்கத்தின் விளக்கம் என்ற தலைப்பின் கீழ் 16-ல் இருந்து, 17-ல் இருந்து, 18-ல் இருந்து என்ற மூன்று வரிகளை எடுத்துவிட்டுக் கீழ்க்கண்ட நான்கு வரிகளைச் சேர்த்துக் கொள்க.

16-ல் இருந்து 12 வரை $6\frac{3}{4}$ அங்.

17-ல் இருந்து 16 வரை $\frac{1}{2}$,,

18-ல் இருந்து 16 வரை நேர்க்கோடு இணைக்க.

19-ல் இருந்து 18 வரை 3 அங்.

"ஒருவனது இயல்பை அறிவிக்கும் கருவிகளில் அவனது உடையும் ஒன்று. ஒருவனது உடைக் கோலத்தைக் கொண்டு, அவனது அகநிலையை அளக்கலாகும். 'நடைக்கேற்ற உடை' என்பது பழமொழி. 'நடை உடை பாவனை' என்பது வழக்காறு. தனது நடைக்கேற்ற உடையை ஒருவன் அணிய விரும்புவது இயல்பு."

—திரு. வி. க.

Regn. No. M 6290

"மன்றம்" வெளியீடுகள்

இரா. நெடுஞ்செழியன் எழுதியவை:

கண்ணீரும் செந்நீரும்	
வளர்த்த கழகம்	0 12 0
மறைந்த திராவிடம்	0 3 0

இரா. செழியன் எழுதியவை:

ராஜாதி ராஜா! (கதைத்தொகுப்பு)	0 12 0
பொது அறிவு (கட்டுரைத் தொகுப்பு)	0 8 0

கிடைக்குமிடம்:

மன்றம் பதிப்பகம்
26, நைனியப்பன் தெரு
மண்ணடி, சென்னை-1.

"மன்றம்" விற்பனையாளர்கள் தேவை

கீழ்க்கண்ட ஊர்களில் மன்றம் இதழுக்கு முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர் தேவை.

- ஸ்ரீவைகுண்டம்
- ஆம்பூர்
- ஆரணி
- சின்னமனூர்
- திருப்பத்தூர் (வ. ஆ)
- அம்பாசமுத்திரம்
- தேனி
- காங்கேயம்
- அறந்தாங்கி
- இராஜபாளையம்
- விருதுநகர்
- சீர்காழி
- செங்கற்பட்டு

மற்றும் விற்பனையாளர் இல்லாத ஊர்களிலும் விற்பனையாளர் தேவை.

விபரங்களுக்கு:

நிர்வாகி,
'மன்றம்'
26, நைனியப்பன் தெரு, மண்ணடி,
சென்னை-1.

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M. A., at MANRAM ACHAKAM at 26, Nainiappan St, Mannadi, MADRAS-1.